பக்கங்கள் 16+4
விலை ரூ. 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 190

ஞாயிற்றுக்கிழமை 04 ஜூன் 2023

வைகாசி 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## எரிவாயுவின் விலை 300 ரூபா குறைப்பு

விரிவு:- பக்.02

## ஹெரோய்ன் பயன்படுத்திய 10 வயதுச் சிறுவன் கைது

யாழில் அதிர்ச்சி சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
உயிர்கொல்லி ஹெரோய்ன் பயன்படுத்திய குற்றச்சாட்டில் 10 வயதுச் சிறுவன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான். »15

யாழ். பல்கலைக்கழக

## துணைவேந்தர் பதவிக்கு நால்வர் விண்ணப்பம்!

கிழக்கிலிருந்தும் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு நான்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என அறிய வருகிறது. அவற்றுள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரின் விண்ணப் »15

வடக்கு - கிழக்கில்

# பௌத்த மயமாக்கலை இந்தியா கட்டுப்படுத்தாது!

கூறுகிறார் மனோ கணேசன்



கொழும்பு, ஜூன் 4
தமிழர்கள் அதிகளவில் வாழும் வடக்கு - கிழக்கில் பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்த இந்தியாவின் உதவியைக் கோருவதால் எவ்வித பயனும் இல்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். »15

## கஜேந்திரகுமார் மீதான தாக்குதல்: ஜனாதிபதி, பிரதமருக்கு தெரியாதாம்

கொழும்பு, ஜூன் 4
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் மீதான பொலிஸாரினதும் அரச புலனாய்வுப் பிரிவினதும் தாக்குதல் தொடர்பில் எதுவும் தெரியாது என்று ஜனாதிபதி ரணில் »15

## யாழ். பல்கலையில் மோதல்; மாணவன் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக மூன்றாம் ஆண்டு »15

## தையிட்டி விகாரையில் பொசன் வழிபாடுகள்

தென்னிலங்கையிலிருந்து அழைத்துவரப்பட்டோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4
காங்கேசன்துறையில் அமைந்துள்ள தையிட்டி திஸ்ஸ மஹா விகாரையில் பொசன் »15





## தையிட்டி விகாரைக்கு எதிராக மக்கள் எழுச்சிப்போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக் கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் மக்களின் ஆதரவுடன் நான்காவது நாளாக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதுவரை காலமும் இல்லாதளவுக்கு »15

தனி வீட்டில் யுவதியோடு-

## சமூகச் சீரழிவில் ஈடுபட்டிருந்த கத்தோலிக்க மதகுரு பிடிபட்டார்

மதுபானப் போத்தல்களும் மீட்பு

கதிரையில் கழற்றி வீசப்பட்டிருந்தது மேலங்கி



யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலுள்ள தேவாலயமொன்றில் உதவி அருட்தந்தையராகப் பணிபுரியும் 55 வயதான கத்தோலிக்க மதகுரு ஒருவர், 24 வயது இளம் பெண்ணுடனும், மதுபானப் போத்தல்களுடனும் தனியான வீடொன்றில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டார். பின்னர் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் [illegible]

சஞ்சீவி
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக

# 21,374 முறைப்பாடுகளில் 3,179 விசாரணை பூர்த்தியாம்

### நீதியமைச்சர் தகவல்



**கொழும்பு, ஜூன் 4**

**காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இதுவரை கிடைக்கப்பெற்ற 21 ஆயிரத்து 374 முறைப்பாடுகளில் 3 ஆயிரத்து 179 முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தி முடித்துள்ளோம். எஞ்சிய முறைப்பாடுகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவுபெறும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை ஆராயும் அலுவலகத்தின் முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தும் ஊடகசந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக காணாமற் போனவர்களுக்கான அலுவலகம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகளின் பிரகாரம், போரில் உயிரிழந்தவர்கள் மற்றும் காணாமற் போனவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக ஆராய இழப்பீட்டுக் காரியாலயம் ஆரம்பித்தோம். நல்லிணக்கத்தை மேலும் விருத்தி செய்வதை நோக்காகக்கொண்டு தேசிய ஐக்கியம் மற்றும் இன நல்லிணக்கத்துக்கான காரியாலயம் ஆரம்பித்தோம். காணாமற் போனவர்கள் தொடர்பாக ஆராயும் அலுவலகத்துக்கு இதுவரை 21 ஆயிரத்து 374 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில், முறைப்பாடுகளில் இதுவரை 3 ஆயிரத்து 170 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை முடிவடைந்திருக்கின்றன. எஞ்சிய முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை அடுத்த வருடம் நிறைவுறுத்துவதற்கு முயற்சித்துள்ளோம் - என்றார். (ச-இ)

## மன்னார், முல்லைத்தீவு மருத்துவமனைகளுக்கு சி.ரி.ஸ்கானர் இல்லை!

மன்னார், ஜூன் 4

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளில் சி.ரி.ஸ்கானர் இன்றி பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடுவதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகளின் தேவையைக் கருத்திற் கொண்டு சமூகநலன்விரும்பிகள், தன்னார்வலர்கள் முன்வந்து சி.ரி.ஸ்கானரை அன்பளிப்புச் செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-125)

## இயந்திரத்தில் தலைசிக்கி இளைஞன் பரிதாபச் சாவு!



கொழும்பு, ஜூன் 4

ஆடைத் தொழிற்சாலையில் திடீரென இயங்கிய இயந்திரத்தில் இளைஞனின் தலை சிக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். களுத்துறையில் உள்ள தொழிற்சாலையில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வஸ்கடுவ பொக்குணவட்ட வீதியில் அமைந்துள்ள ஆடை உற்பத்தி நிலையம் ஒன்றில் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (ம)

## எரிவாயுவின் விலை 300 ரூபா குறைப்பு

கொழும்பு, ஜூன் 4

12.5 கிலோ கிராம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 300 ரூபா வரையில் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நள்ளிரவு முதல் குறித்த விலைத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். தற்போது 12.5 கிலோ லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 3 ஆயிரத்து 738 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## தைக்கக் கொடுத்த ஆடையை திருப்பிக்கேட்டவர் மீது தாக்குதல்

சாவகச்சேரி, ஜூன் 4

திருமணத்துக்கு தைக்கக்கொடுத்த ஆடைகளை கேட்கச் சென்ற புதுமணத் தம்பதியினரை தும்புத்தடியால் தாக்கி காயப்படுத்தினார் தையலாளர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த இருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். திருமண நிகழ்வுக்காக ஆடைகளை தைப்பதற்குத் தையலாளரிடம் கொடுத்துள்ளனர். திருமணம் நிறைவடைந்துள்ள நிலையில், தைக்கக் கொடுத்த ஆடைகளை மீளக் கேட்க தம்பதிகள் சென்றுள்ளனர்.

இன்னமும் ஆடைகள் தைக்கவில்லை என தையலாளர் கூறியதால் அவற்றை மீளத் தருமாறு மணமகன் கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த தையலாளர் மணமகனைத் தும்புத்தடியால் தாக்கியதுடன் அதனை முறித்துக் கழுத்தில் குத்திக் காயப்படுத்தியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த மணமகனும் பதில் தாக்குதலில் காயமடைந்ததாகத் தையலாளரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ,9)

## ரூ.70 கோடி பெறுமதியான தங்கத்துடன் ஐவர் கைது!

கொழும்பு, ஜூன் 4

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட 70 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்கத்துடன் இலங்கையர்கள் 5 பேரை இந்தியப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையின் வருவாய் புலனாய்வு கண்காணிப்புப் பிரிவு மற்றும் சுங்கத் திணைக்களத்தினர் இணைந்து நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின்போதே இரண்டு படகுகளில் கொண்டு செல்லப்பட்ட 32 கிலோ கிராம் தங்கத்தை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முதல் படகில் பயணித்துக் கொண்டிருந்தவர்களை பாதுகாப்புப் படையினர் கைது செய்வதற்கு முயன்றபோது அவர்கள் 11 கிலோ தங்கத்தை கடலில் வீசியுள்ளனர். இருப்பினும் இரண்டாவது படகிலிருந்து 21 கிலோ நிறையுடைய தங்கம் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-இ)

## அச்சுவேலியில் கடை தீக்கிரை


யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்று இனந்தெரியாத விஷமிகளால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்கு விக்னேஸ்வரா பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. யாழ். மாநகரசபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டபோதும் வர்த்தக நிலையத்தில் பெருமளவில் சொத்தழிவு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. முறைப்பாட்டுக்கமைய அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-26)

## தேர்தல் அரசியலில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனராம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 4

தேர்தல் அரசியல் மீது மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர். எனவே பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 10 - 11 மாதங்களுக்கு முன்பாக வலுவிழந்த நாடாக மாறிவிடும் வகையிலான நிலைமைகளை கடந்து வந்துள்ளோம். தற்போது சட்டம் ஒழுங்கு, அரசியல், பொருளாதார உறுதித்தன்மை உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், நாம் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீண்டுவிட்டதெனக் கூற முடியாது. நாடு நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

*கஜேந்திரகுமார் மீதான அச்சுறுத்தல்*

# தமிழர் ஆயுதப்போரின் நியாயத்தின் வெளிப்பாடு

## *சித்தார்த்தன் எம்.பி. அறிக்கை*

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் 70 வருடங்களுக்கு மேலாக நடத்தும் அரசியல் உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை மீளவும் ஒருமுறை உறுதிசெய்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலையும், மறுவளமாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அரசமைப்பு வழங்கிய சிறப்புரிமைகளை மீறி சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களே கொலை மிரட்டல் விடுவதும், அவர்களை அதிகாரிகள் பாதுகாப்பதும் இலங்கைத் தீவின் இன ஒடுக்குமுறைக்கு மேலுமொரு தெளிவான சான்றாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் சிறப்புரிமைகளை மீறியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் உரிமைகளை மீறியும் பொலிஸார் நடந்து கொண்டது கண்டனத்துக்குரியது. இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட பொலிஸார் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம)

# ஊடகங்களை அடக்கும் முயற்சியை உடன் தடுக்கவேண்டும் ஐ.நா. சபை

## *மக்கள் போராட்ட இயக்கத்துக்கான பிரஜைகள் அமைப்பு வேண்டுகோள்*

**கொழும்பு, ஜூன் 4**

**ஒலிபரப்பு ஆணைக்குழு மூலம் ஊடகங்களை ஒடுக்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளைத் தடுப்பதற்காக ஐ.நா. உடனடியாக தலையிடவேண்டும் என மக்கள் போராட்ட இயக்கத்துக்கான பிரஜைகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பில் மக்கள் போராட்ட இயக்கத்துக்கான பிரஜைகள் அமைப்பின் பொதுச்செயலாளர் ஜனக பண்டார தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்பதால் ஐ.நா. இந்தச் சட்டம் தொடர்பில் உடனடியாக தலையிடவேண்டும். மக்களின் ஜனநாயகத்தை ஒடுக்குவதற்காக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இந்தச் சட்டத்தைக் கொண்டுவர முயல்கின்றார்.

மக்கள் தங்களின் தகவலுக்கான உரிமையைப் பயன்படுத்துவதற்கான வழி ஊடகங்கள் மாத்திரமே. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஜனநாயகத்தை இல்லாமல் செய்ய முயல்கின்றது. ரணில் ஹிட்லர், முசோலினி, பொல்பொட் போன்று மாற விரும்புகின்றார். ஊடகங்களை ஒடுக்குவதற்கான பொதுவான கொள்கையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முயல்கின்றது. சர்வாதிகாரிகள் போல எப்போதும் ஆளமுடியாது என்பதை அரசாங்கம் உணரவேண்டும். மக்கள் சர்வாதிகாரிகளை துரத்தியுள்ளனர் - என்றார். (எ-இ)

# பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் புதிய அலுவலகம் நாளை திறப்பு

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் புதிய அலுவலகம் நாளை திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் மற்றும் மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். இல. 83, ஆடியபாதம் வீதி திருநெல்வேலியிலேயே இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஓ-5)

## உருளைக்கிழங்கு சீவல் மிக விரைவில் ஏற்றுமதி!

சீவிய உருளைக்கிழங்கை ஏற்றுமதி செய்வதை இலக்காகக் கொண்டு, அதற்கேற்ற தொழிற்சாலையொன்று இலங்கையில் நிறுவப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பண்டாரவெள கஹறந்தேவெலயில் நூறு மில்லியன் ரூபா செலவில் இந்தத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலை மூலம் நாள் ஒன்றுக்கு, ஆயிரம் கிலோ உருளைக்கிழங்குச் சீவல் தயாரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நுகர்வு குறைந்தமையால் பணவீக்கம் குறைந்தது!

## *பொருளாதார சாதனையல்ல ராஜகருணா எம்.பி. தெரிவிப்பு*



இலங்கையில் நுகர்வு குறைக்கப்பட்டதன் காரணமாகவே பணவீக்கம் குறைந்துள்ளது. இதுவொன்றும் பொருளாதார சாதனை அல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பணவீக்கம் 70 வீதத்தில் இருந்து 22.5 வீதமாகக் குறைவடைந்துள்ளது என்று ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டிருந்தார். எனினும் நுகர்வு குறைந்ததன் காரணமாகவே பணவீக்கம் 22.5 சதவீதமாக குறைந்துள்ளது. அரசாங்கத்தில் இருப்பவர்களில் சிலர் முதலீட்டாளர்களிடம் தரகுப்பணம் கேட்டு முதலீட்டைச் சீர்குலைக்கிறார்கள். 20 கிலோகிராம் அரிசி, அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களால் அவர்களுக்குப் பிடித்தமானவர்களுக்கே விநியோகிக்கப்படுகின்றன. இவ்வாறிருக்கையில் அரசாங்கம் எவ்வாறு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் - என்றார். (ம-இ)

*ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு*

# ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடியே முடிவு

## *நீதி அமைச்சர் கூறுகின்றார்*

கொழும்பு. ஜூன் 4

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் தயாரிக்கப்பட்டிருக்கும் பிரேரணைகள் தொடர்பாக ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னரே பொருத்தமான சட்ட வரைவு தயாரிக்கப்படும். அதற்காக எதிர்வரும் 7 ஆம் திகதி ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இந்த ஆணைக்குழு நிறுவுவது தொடர்பில் பிரதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது ஊடக அமைச்சாலாகும். தற்போது வழங்கப்பட்டிருக்கும் வானொலி அலைவரிசைகள் தொடர்பான அனுமதிப் பத்திரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழாகும். தொலைக்காட்சி அனுமதிப் பத்திரம் வழங்கி இருப்பது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன சட்டத்தின் விதிகளுக்கமையவாகும்.

அதனால் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதைத் தரத்துடன் ஒழுங்குபடுத்துவதற்காக முறையொன்றை தயாரிப்பதற்கு அமைச்சரவை உப குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைவராக நானும் ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, அமைச்சர்களான அனுஷ நாணயக்கார, நிமால்சிறிபால டி சில்வா, கெஹலிய ரம்புக்வெல ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சரவை உபகுழுவால் பல பிரேரணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது தயாரிக்கப்பட்டிருப்பது பிரேரணைகள் மாத்திரமாகும். இதுதொடர்பாகக் கலந்துரையாடி பொருத்தமான சட்ட வரைவு ஒன்றைத் தயாரிப்பதற்கு இருக்கிறோம். இந்தப் பிரேரணைகள் தொடர்பில் ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் தங்களின் யோசனைகள் கருத்துக்களை முன்வைக்க முடியும் - என்றார். (எ-இ)

# அமெ. டொலருக்கு நிகராக ரூபா வலுவடையவில்லை!

கொழும்பு, ஜூன் 4

ரூபா வலுவடைந்ததால் டொலரின் பெறுமதி குறைவடையவில்லை. டொலரின் பெறுமதி வீழ்ச்சிக்குப் பின்னால் உள்ள காரணத்தைத் தெரியாமல் பலர் சிறுபிள்ளைத்தனமாக கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றனர் என்று பொருளாதார ஆய்வாளர் மஞ்சு நிஷங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்க டொலர் ஒன்றின் விலை 300 ரூபா வரை குறைந்துள்ளது. இதையடுத்து, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களால் ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வலுவடைந்து வருவதாக சமூக ஊடகங்களில் பலவாறு தகவல்கள் வெளியாகியுள்ளன. இது முழுப் பொய், மாயை. உண்மையில் ரூபா வலுவடையவில்லை.

[illegible]ம் விலை என்பது வழங்கல் மற்றும் தேவையால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். இறக்குமதியாளர்கள் எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இறக்குமதியாளர்கள் தங்கள் வணிகங்கள் மூலம் அமெரிக்க டொலரை நாடுபவர்களாக இருந்தனர். ஆனால் கடந்த இரண்டரை வருடங்களாக எமது நாட்டின் இறக்குமதிகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதை நாம் அறிவோம். இதனால், இறக்குமதியாளர்களுக்கு டொலர் என்பது தேவையில்லை.

அத்துடன், நாட்டை நடத்துவதற்குத் தேவைப்படும் செலவுகளைக் குறைத்து நாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் டொலரைச் சேமித்து வைத்துத்தான் செயற்படுகின்றார்கள். அதன் மூலம் டொலரின் தேவை குறைந்துள்ளது. இதனால்தான் டொலர் மதிப்பிழந்துள்ளதே அன்றி மற்றும்படி ரூபா வலுவடையவில்லை - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிறுத்திய நியமனத்துக்கு மீளவும் எம்மை உள்ளீர்க்குக

## வடக்கு மாகாண செயற்றிட்ட உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்




வவுனியா, ஜூன் 4

**இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை மீளவும் உடனடியாக வழங்குமாறு கோரி வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த செயற்றிட்ட உதவியாளர்கள், ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை வவுனியாவில் நேற்று முன்னெடுத்தனர்.**

வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான இந்தப் பேரணி மணிக்கூட்டுச் சந்தியை அடைந்து அங்கிருந்து ஜனாதிபதியின் உப அலுவலகம் வரை சென்றடைந்தது. அங்கு போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட வடமாகாண செயற்றிட்ட உதவியாளர்கள் அந்த மனுவில் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசாங்கத்தில் நியமனம் வழங்கப்பட்டு எமது கடமைகளை தொடர்புடைய அலுவலகங்களில் நாம் பொறுப்பேற்றுக்கொண்டோம். பின்னர் நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதுடன் நியமனத்தை இடைநிறுத்தி சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதற்கமைய நாம் பணியிலிருந்து விலகி தேர்தல் முடிவடையும் வரை காத்திருந்தோம்.

எங்கள் நியமனங்கள் நிதி அமைச்சால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது. 4 வருடங்கள் கடந்தபோதும் இதுவரை எந்தத் தகவலும் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவில்லை. வாழ்வாதார இழப்பு காரணமாக கடுமையான துயரங்களுக்கு ஆளாகியுள்ளோம். இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை மீளவும் உடனடியாக வழங்க வேண்டும் - என்றுள்ளனர். (ச-110)



## வவுனியா சிறையில் 5 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு!

கொழும்பு, ஜூன் 4

பொசன் போயா தினத்தை முன்னிட்டு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக வவுனியா சிறைச்சாலையில் இருந்து 5 கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறு குற்றங்களுக்காகக் கைதானவர்களும் மற்றும் தண்டப்பணம் செலுத்த தவறியவர்களுமாக 5 பேரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது (ச-18,110)

## காலாவதிப்பொருள் விற்பனை: வர்த்தகர்களுக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட அராலியில் காலாவதியான உணவுப்பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் பலருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் கடந்த புதன்கிழமை அராலிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் சோதனைக் குட்படுத்தப்பட்டன. இதன்போது, பல வர்த்தக நிலையங்களில் காலாவதியான பிஸ்கட்டுகள், நூடில்ஸ் உள்ளிட்ட பல பொருள்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டன. இதையடுத்து அந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது. (ச-இ)

## தேர்த்திருவிழா!

வவுனியா, ஜூன் 4

வவுனியாவில் குருமன்காட்டு ஸ்ரீகாளி அம்மன் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பலநூறு பக்தர்கள் பக்திபூர்வமாக தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டனர். திருவிழாவுக்கு வருகைதந்த பக்தர்களுக்கு பசுமைக்குரல் எனப்படும் அமைப்பினரால் ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (ரி-19)

## மக்கி அகழ்வைத் தடுக்க பொதுமக்கள் கோரிக்கை!

சாவகச்சேரி, ஜூன் 4

மட்டுவில் வேம்பிராய் பகுதியில், சட்டவிரோத மக்கி அகழ்வு இடம்பெறுகின்றது என்றும், அதை உடனடியாகத் தடுத்துநிறுத்த வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் மக்கி அகழ்வைத் தடுப்பதற்காக விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனால், இந்த சட்டவிரோத அகழ்வு நடவடிக்கைகள் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. தற்போது அவை மீண்டும் இடம்பெறுகின்றன என்று மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ம-ரி-125)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பேசும்போது பொறுமை அவசியம். காரியத்தில் தாமதம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சி தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். மனஸ்தாபம் ஏற்படலாம்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். செலவு செய்ய வேண்டி வரும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். செலவுகள் ஏற்பட்டா லும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். அரவணைத்துச் செல்வது அவசியம். உறவினர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு. உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். குடும்பப் பெரியவர்களுடன் பேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மாலையில்

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் அவசியத் தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இல்லை.

**கும்பம்:** வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் விவாதம் ஏற்படக்கூடும்.



## விழிப்புணர்வு

கொக்குவில், ஜூன் 4

கொக்குவில் முதலியார் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு "புகைத்தலில் இருந்து மீண்ட ஒரு கிராமம்; மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் தேசம்" எனும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு கொக்குவில் சுப்பிரமணியம் மாலதி சனசமூக நிலையத்தின் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தங்க வாத்தை வெட்டும் இலங்கை

யாழ். மாவட்டத்தில் 619 ஏக்கர் கடற்பரப்பில் நிறுவப்பட்ட பண்ணைகள் மூலமாக சுமார் 56 தொன் கடலட்டைகள் ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக 'நாரா' நிறுவனம் அறிவித்துள்ளது. இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு, டொலரை நாட்டுக்குள் தருவிப்பதற்கு இந்தக் கடலட்டை ஏற்றுமதி பயனளிக்கும் ஒரு செயற்பாடென்பதை மறுதலிக்கமுடியாது. இன்னொரு வகையில் பார்த்தால் இந்தக் கடலட்டை ஏற்றுமதி மூலமாக சீனாவைச் சேர்ந்த நிறுவனங்களும், உள்ளூரில் ஒரு சிலருமே இலாபமடையப் போகிறார்கள். ஆனால், கடற்றொழிலையும், கடலன்னையையும் நம்பியிருக்கும் பல்லாயிரம் குடும்பங்கள் போதிய மீன்பிடியின்றி நிரந்தர வறுமைச்சூழலுக்குள் தள்ளப்படும் அபாயமும் தோன்றியுள்ளது. ஏனெனில் பாரம்பரியமாக மீன்பிடிபாடு அதிகமாகவுள்ள கடற்கரைப் பகுதிகளில் 619 ஏக்கரை ஆக்கிரமித்தே இந்தக் கடலட்டைப் பண்ணைகள் உருவாக்கப்பட்டிருந்தன. அதனால் அந்தப் பகுதியில் மீன்பிடியை வழக்கமாகக் கொண்டிருந்தவர்களின் வாழ்வாதாரம் சுருங்க, பண்ணைகளை அமைத்த பணம் படைத்தவர்களின் நிலை உயரத் தொடங்கியுள்ளது. இந்தக் கடலட்டைப் பண்ணைகள் வெறுமனே பொருளாதார நலன்களுக்காக மட்டும் அமைக்கப்பட்டவை என்று நம்புவோமானால் அதைவிட அறிவிலித்தனம் வேறுகிடையாது. அப்படியானால் இந்தக் கடலட்டைப் பண்ணைகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் மர்மம் என்ன?

கடலட்டை பிடிப்பதென்பது அண்மைக்காலமாக உருப்பெற்ற ஒரு தொழில்முறையன்று. பாரம்பரிய மீனவர்களிடத்தேயும் ஒரு குறிப்பிட்ட பருவகாலத்தில் கடலட்டைப் பிடிப்பு இருந்தே வந்துள்ளது. ஆனால் அதைப் பண்ணைத் தொழிலாக பெரியளவில் மாற்றி, எந்தக்காலத்திலும் தொன் கணக்கில் கடலட்டைகளை ஏற்றுமதி செய்யும் நிலை மிகசமீபத்தில்தான் தோற்றம்பெறத் தொடங்கியுள்ளது. இந்தக் கடலட்டைப் பண்ணைகளின் உருவாக்கத்தின் பின்னால் சீனாவே உள்ளது. என்னதான் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று இலங்கை அரசாங்கம் கூப்பாடு போட்டாலும் உண்மை அதுதான். சீனா தன் நாட்டுக்கடலில் இந்தக் கடலட்டைப் பண்ணைகளை நிறுவாமல், இலங்கையின் வடக்குக் கடற்பகுதியைத் தேர்ந்தெடுத்தமைக்கும் காரணங்கள் இல்லாமலில்லை. கடலட்டைப் பண்ணைகள் என்ற போர்வையில் இலங்கையின் வடக்குக் கடலில் கால் பதித்தல், அதனூடாக தனது பரம எதிரியான இந்தியாவின் கடல் எல்லையில் எப்போதும் ஒரு கண் வைத்திருத்தல், இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தன் கடலாதிக்கத்தை நிறுவுதல், கடல்சார்ந்த சீனாவின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான பரிசோதனை எலியாக இலங்கையைப் பயன்படுத்துதல் என்பனவே இந்தக் கடலட்டைப் பண்ணைகளின் பின்னுள்ள சீனாவின் நோக்கங்களாகும்.


சீனாவின் போர்க்கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்பில் வந்தால் தான் இந்தியா உள்ளிட்ட சீன எதிர்ப்பு நாடுகள் வரிந்துகட்டிக்கொண்டு, இலங்கையோடு சண்டைக்கு வரக்கூடும். அது இந்துசமுத்திரப் பிராந்தியத்திலும் கொந்தளிப்பான சூழமைவை நித்தியத்தனமாக்கிவிடும். ஆனால் மீன்பிடி, கடலட்டை என்ற பொருளாதார நோக்கத்தோடு இலங்கையின் கடற்பரப்பை சீனா பயன்படுத்தினால் அதனை எவரும் பெரிதாகக் கண்டுகொள்ளப்போவதுமில்லை; 'ஏன் இலங்கையில் வந்து கடலட்டை பிடிக்கிறாய்?' என்று சீனாவோடு மல்லுக்கட்டவும் முடியாது. ஏனெனில் இது ஒரு வர்த்தக உற்பத்தி நடவடிக்கை என்று சீனா அப்பாவித்தனமாகப் பதில் சொல்லி எல்லோரது வாயையும் அடைத்துவிடும். உலகநாடுகள் பார்த்திருக்க, கடலட்டை பிடிப்பதாகப் பாசாங்குபண்ணிக்கொண்டு, பகிரங்கமாகவே இந்தியாவைக் கண்காணிப்பதோடு, இந்துசமுத்திரப் பிராந்தியத்தையும் சீனா தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இந்தக் கடலட்டைப் பண்ணைகள் ஏதுவாகின்றன.

அதைவிட, 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சீனாவின் கடற்றொழில் உற்பத்திகள் படுவீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றன. சீனக்கடற்பரப்பு அதிகளவு மாசுபட்டுள்ளதால், கடல்வாழ் உயிரிகள் அழிவடைந்தமையும், எஞ்சியவை வேறு கடற்பகுதிகளுக்கு நகர்ந்து சென்றமையுமே இதற்கு முக்கியமான காரணிகள். எனவே சீனமக்களின் கடலுணவுத் தேவையை நிறைவு செய்யவும், கடல் உற்பத்திகளில் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து அவற்றைப் பரிசோதனை செய்து பார்க்கவும் ஒப்பீட்டளவில் மாசுபாடு மிகக்குறைந்த இலங்கையின் வடக்குக் கடற்பகுதி சீனாவுக்கு ஒரு வரப்பிரசாதம். எனவே தான் இலங்கையின் வடகடலைச் 'சிக்கெனப்' பிடித்த சீனா, கடலட்டைப் பண்ணைகளை நிறுவி, இங்குள்ளவர்களின் வாயைப் பணத்தால் மூடிவிட்டு, தனக்கு வேண்டிய காரியங்களை பிசகின்றி நிறைவேற்றத் தொடங்கியுள்ளது. சீனாவின் வளர்ச்சிக்காக தன்நாட்டு மீனவர்களின் வாழ்வியலையே பலிகொடுக்க இலங்கையும் தயாராகவேயுள்ளது. அரசாங்கத்துக்கு எந்தவழியிலேனும் டொலர் வந்தால்போதும். மீனவர்களைப் பற்றி அக்கறையேயில்லை. ஆனால் ஒரேயடியாக இலாபம் பெறுவதற்காக, தங்க முட்டையிட்ட வாத்தை வெட்டியவன் போல, தற்காலிக இலாபத்துக்காக, கடலட்டைப் பண்ணைகளுக்காக, நிரந்தரமான மீன்பிடி வருவாயையும் மீனவர்களையும் எதிர்காலத்தில் இலங்கை இழக்கும் அபாயம் நிறையவே உண்டு.

### நாளொரு நல்வார்த்தை

"வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை வீணாக்காதே. காலத்தால் செய்யப்பட்டதே வாழ்க்கை"

— ரிச்சர்ட் சாண்டர்ஸ்




## இனவாத, மதவாதத்தைத் தூண்டி நாட்டை மீளவும் சீர்குலைக்காதீர்

### கருஜயசூரிய வேண்டுகோள்

**கொழும்பு, ஜூன் 4**

**இனவாத மற்றும் மதவாதக் கருத்துகளால் நாட்டை மீண்டும் துன்பகரமான சூழ்நிலைக்கு இட்டுச் செல்வதற்கு வழிவகுக்கக்கூடாது. அதுபோன்ற நிலையைத் தடுப்பது ஒட்டுமொத்த நாட்டினதும் பொறுப்பாகும் - இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.**



இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:

கடந்த சில நாள்களாக நாட்டின் பல்வேறு தரப்புகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் கருத்துத் தெரிவிப்புக்கள் தொடர்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் உன்னிப்பாகக் கவனம் செலுத்தியுள்ளது. மதம் சார்ந்த பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் சில தரப்பினரால் பதற்றத்தை தூண்டும் விதத்தில் வெளியிடும் கருத்துக்களானவை நாட்டைச் சீர்குலைக்கும்.

எமது நாட்டின் கடந்தகால கசப்பான சம்பவங்களை கூர்ந்து கவனிக்கையில் இதுபோன்ற பொறுப்பற்ற கருத்துக்களும், செயற்பாடுகளும்தான் காரணமாக அமைந்திருந்தன. நாட்டை மீண்டும் இக்கட்டான நிலைக்கு கொண்டு செல்லும் கொடிய முயற்சிகள் தடுக்கப்படவேண்டும். உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலால் ஏற்பட்ட வடுக்கள் இதுவரை மறைந்திடாத நிலையில், நாட்டில் மதப்பதற்ற சூழல்கள் ஏற்படுவதை சாதாரணமாக கருத முடியாது. கடந்தகால துன்பகரமான சூழ்நிலைகளை தோற்றுவிக்கவிடாமல் - நாட்டை மீண்டும் வீழ்ச்சியடைச் செய்யாது தடுப்பது எம் அனைவரினதும் கடமையாகும் - என்றுள்ளது. (ச-இ)

## ஏலத்தில் விற்கப்படவுள்ள திறைசேரி உண்டியல்கள்

கொழும்பு, ஜூன் 4

ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 7ஆம் திகதி ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளன என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 65 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளன என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

(எ-இ)

**நாளை** 05.06.2023
திங்கட்கிழமை
வைகாசி 22

சுபநேரம் : 11.52 - 01.22
ராகுகாலம் : 07.22 - 08.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடானில் உள்நாட்டுப் போர் :

# 60 குழந்தைகள் பட்டினியால் சாவு!



**கார்டூம், ஜூன் 4**
**சூடானில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக, உணவு கிடைக்காமல் குழந்தைகள் காப்பகத்தில் இருந்த ஏறத்தாழ 60 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.**

ஆசியாவில் உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் இருக்கும் நாடுகளில் சூடான் முக்கியமான நாடாகும். கடந்த 2021 ஆம் ஆண்டு ஆட்சியை இராணுவம் கைப்பற்றிய நிலையில் அவர்களுக்கும் துணை இராணுவப் படையினருக்கும் இடையே உக்கிரமடைந்த மோதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போரால் பொதுமக்கள் உணவு, நீர் இன்றித் தவித்து வருகின்றனர். அண்மையில் சூடான் தலைநகர் கார்டூமிலுள்ள குழந்தைகள் காப்பகம் அருகே தாக்குதல் நடத்தப்பட்டது. அதன் காரணமாக அந்தப் பகுதிக்கு வந்து சேர வேண்டிய உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் தடைப்பட்டன. அதனால் கடந்தவாரத்தில் மட்டும் 26 குழந்தைகள் உயிரிழந்தனர். அதுபடிப்படியாக உயர்ந்து தற்போது சுமார் 60 குழந்தைகள் உணவு இல்லாமல் உயிரிழந்துள்ளனர். அதேவேளை சூடான் முழுவதும் பட்டினியால் சுமார் 341 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-இ)



## ஒடிசா ரயில் விபத்து

# பலி எண்ணிக்கை 280 ஆக உயர்வு

சென்னை, ஜூன் 4
ஒடிசா புகையிரத விபத்தில் பலியானோரின் எண்ணிக்கை 280 ஆக அதிகரித்துள்ளதுடன் 900க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சென்னை கோரமண்டல் எக்ஸ்பிரஸ் உட்பட 3 ரயில்கள் ஒடிசா மாநிலத்தின் பாலாசூர் மாவட்டமருகே ஒன்றோடொன்று மோதியதில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து நேர்ந்தது.
இரவிரவாக மீட்புப் பணிகள் தொடர்ந்த நிலையில் நேற்றும் 2ஆவது நாளாக மீட்புப் பணிகள் தொடர்ந்தன.
இந்தக் கோர விபத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 280 ஆக உயர்ந்துள்ளது. படுகாயமுற்ற 900க்கும் மேற்பட்டோர் அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# கீவ் நகரில் தாக்குதல்!


### ரஷ்யா மூர்க்கம்

கீவ், ஜூன் 4
உக்ரைனின் கீவ் நகரில் கடந்த மூன்று தினங்களாக ரஷ்யா கடும் தாக்குதல்களை நடத்திவருகின்றது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக இந்தப் போர் இடம்பெற்று வருகின்றது. எனினும் இன்னமும் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இரு நாடுகளும் சம்மதிக்கவில்லை. இவ்வாறிருக்கையில், உக்ரைனின் தலைநகர் கீவில் கடந்த மூன்று நாள்களாக ரஷ்யா கடும் தாக்குதல்களை நடத்திவருகின்றது என்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் குழந்தைகளும் உள்ளடக்கம் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# கஜேந்திரகுமார் எம்.பி.யை யாரும் தாக்கவில்லையாம்

### முழுப்பூசணிக்காயை மறைக்கிறார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 4
மருதங்கேணியில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொலிஸாருக்கு இடையில் வாய்த்தர்க்கம் மாத்திரமே இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். அங்கு எந்தவொரு அச்சுறுத்தலோ தாக்குதலோ இடம்பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் பிற்பகல் மருதங்கேணியில் தாக்கப்பட்டுள்ளார். அவரை அடித்ததாகக் கூறப்படும் அரச புலனாய்வாளர் தப்பிச் சென்று தலைமறைவாகினார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையிலேயே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (அ-ஓ.இ)




# ஒவ்வொரு சிகரெட்டிலும் எச்சரிக்கை வாசகங்கள்


### கனடாவில் விழிப்புணர்வு

ஒட்டாவா, ஜூன் 4
கனடாவில் விற்பனையாகும் சிகரெட் பெட்டிகளில் உள்ள ஒவ்வொரு சிகரெட்டிலும் சுகாதார எச்சரிக்கை வாசகங்களை அச்சிடுவதற்கு அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.
ஒவ்வொரு சிகரெட்டிலும் 'புகையிலையின் புகை குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும்', 'புகையிலை புற்றுநோய் உருவாவதற்கு ஒரு காரணம்', 'ஒவ்வொரு புகைத்தலிலும் விஷம் உள்ளது' போன்ற வாசகங்கள் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் அச்சிடப்படவுள்ளன.
பொதுமக்கள் மத்தியில் சிகரெட் பயன்பாட்டை குறைக்கும் வகையில் கனடா அரசு விழிப்புணர்வு நடவடிக்கையை எடுத்துள்ளது. (ச-இ)



# நாய்க்கு வீடு கட்டி பரிசளித்த யூரியூபர்

வொஷிங்டன், ஜூன் 4
அமெரிக்காவில் பிரபல யூரியூபர் ஒருவர் தனது செல்லப் பிராணிக்கு ரூ.16.5 லட்சத்தில் வீடு கட்டிக் கொடுத்துள்ளார்.
அமெரிக்காவைச் சேர்ந்த ப்ரெண்ட் ரிவேரா என்பவரே நாய்கள் மீதான பிரியத்தால் தனது வளர்ப்பு நாய்க்கு வீடு கட்டி பரிசளித்துள்ளார். அந்த வீடு, மனிதர்கள் பயன்படுத்தும் ரிவி, மெத்தைகள் என அனைத்து வசதிகளுடனும் காணப்படுகிறது. (ச-இ)




# உணவுப்பஞ்சத்தில் பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஜூன் 4
பாகிஸ்தானில் வரும் மாதங்களில் கடுமையான உணவுத்தட்டுப்பாடு அபாயம் ஏற்படும் என ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.
இதுதொடர்பில் ஐ.நா. சபை வெளியிட்ட அறிக்கையில்,
பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது. அந்நாட்டின் அந்நியச் செலாவணி இருப்புக் குறைந்து வருவதால் இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒருபோதும் இல்லாத வகையில் பணவீக்கம் 38 சதவீதம் என்ற அளவுக்கு பாகிஸ்தானில் உயர்ந்துள்ளது
அதனால் அங்கு உணவுக் பொருள்கள், பெற்றோல், டீசல் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை அடுத்த மாதங்களில் பாகிஸ்தானில் பதிவாகலாம்- என்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொற்றாநோய்கள் நாட்டில் பரவல்; உணவுகளின் தரத்தைப் பேணுக!

## சுகாதாரத்துறை அறிவுறுத்து



**கொழும்பு, ஜூன் 4**

**நாட்டில் தற்போது தொற்றா நோய்களின் பரவல் அதிகரித்துள்ளது. பொதுமக்கள் இதுவிடயத்தில் அவதானம் செலுத்தி ஆரோக்கிய உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.**

இதுதொடர்பில் சுகாதார அமைச்சின் போஷாக்குப் பிரிவுப் பணிப்பாளரும் விசேட மருத்துவ நிபுணருமான லக்மினி நயனா மகோத ரத்ன தெரிவிக்கையில்,

நாட்டில் பல பாகங்களிலும் தொற்றாநோய்கள் பரவுகின்றமையால் சர்க்கரை, கொழுப்பு, உப்பு உணவுகளில் மிகுந்த அவதானம் தேவை. கோடை நெருங்கிவிட்டதால் சந்தைகளில் விற்கப்படும் குளிர்பானங்களை வாங்கி அருந்துவது ஆபத்தையே விளைவிக்கும்.

பொதுமக்கள் உணவு வகைகளைப் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் போன்று தரம்பிரித்து உட்கொள்ள வேண்டும்.

பச்சை நிற உணவுகள் சிறந்த ஊட்டச்சத்தாக இருப்பதுடன், அவ்வகையான உணவுகள் சிறந்த தெரிவாக இருக்கும்.

மஞ்சள் நிற உணவுகள் ஊட்டச் சத்துக்களை வழங்குவதுடன், அவதானமாகத் தெரிவுசெய்து உண்ண வேண்டும். சிவப்பு நிற உணவுகள் கட்டுப்பாட்டுத் தெரிவாக இருக்க வேண்டும். பெற்றோர் தங்களது பிள்ளைகளின் போஷாக்குக் குறித்து அக்கறை கொள்ளவேண்டும் - என்றார். (ச-இ)

# அரசால் புதிய சட்டவரைவுகள் ஆராய எதிர்க்கட்சியால் குழு

கொழும்பு, ஜூன் 4

அரசாங்கம் கொண்டுவர இருக்கும் ஒளிபரப்பு அதிகாரசபைச் சட்டம் உள்ளிட்ட சட்டவரைவுகளை ஆராய்வதற்காக குழுவொன்றை எதிர்க்கட்சி நியமித்துள்ளது.

அதற்கமைய அரசால் கொண்டுவரப்பட்ட ஒளிபரப்பு அதிகாரசபை சட்டவரைவை ஆராய பேராசிரியர் சரித்த ஹேரத் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு உறுப்பினர்களாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், கயந்த கருணாதிலக்க, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டவரைவு குறித்து ஆராய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி சட்டவரைவை ஆராய எரான் விக்ர மரத்ன தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. சட்டவரைவுகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துகளை சேகரிக்கவுள்ளது இந்தக் குழு. அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசித்தன் பின்னர் எதிர்க்கட்சி கூட்டணியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. (ச-இ)

# புறாக்களால் போதைப்பொருள் விநியோகம்

கொழும்பு, ஜூன் 4

அம்பாறை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து வீடுகளில் வளர்க்கப்படும் புறாக்களினூடாக போதைப்பொருளை நுட்பமாக விநியோகித்து வந்த இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கல்முனைப் பகுதியில் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்களிடமிருந்து 3 கிராமும் 170 மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் பொதி மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 4

அடுத்த சில நாள்களில் தென்மேற்கு பருவ மழை நாடுமுழுவதும் ஏற்பட வாய்ப்புள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

அடுத்த சில நாள்களில் மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம். வடமேல் மாகாணத்திலும் பல தடவைகள் மழை பெய்வதுடன், ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# ஆடுகளுக்கும் காப்பீடு

கொழும்பு, ஜூன் 4

ஆடுகளுக்கு காப்பீடு வழங்க விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதிச் சபை திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சபையின் தலைவர் டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர குறிப்பிடுகையில்,

விவசாயத் துறையுடன் தொடர்புடைய பல துறைகளுக்கு புதிய காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். அந்தவகையில் கால்நடை முகாமைத்துவத்தில் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்குள் 70 ஆயிரம் ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆடுகளுக்கு காப்புறுதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆடுகளுக்கு ஆண்டுக்கு 400 ரூபா காப்பீட்டுத் தொகையுடன் காப்பீடு செய்ய வாய்ப்பு வழங்கவும், ஆடுகள் திருட்டுப் போனாலோ அல்லது திடீரென இறந்தாலோ அதிகபட்ச இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை ஆடுகளை இலவசமாக வழங்கும் ஏற்பாட்டுக்கு 150 மில்லியன் ரூபாவை அரசாங்கம் இந்த ஆண்டு ஒதுக்கியுள்ளது - என்றார். (ச-இ)

# செயற்கைச் சிறுநீரகங்கள் நாட்டில் கடும் தட்டுப்பாடு

## மருத்துவர்கள் திண்டாட்டம்

கொழும்பு, ஜூன் 4

சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் நாட்டில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுநீரக நோயாளர்களுக்கு டயாலிசிஸ் செய்ய பயன்படுத்தப்படும் செயற்கைச் சிறுநீரகங்கள் மற்றும் இரத்த நாளங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சிறுநீரகம் மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய மையத்தில் அவை இன்னும் ஒரு வாரத்துக்கு மட்டுமே போதுமானதாக உள்ளன. அதேவேளை நாட்டில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

மாதாந்தம் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளர்கள் பதிவாகின்றனர் என மருத்துவ நிபுணர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ச-இ)

# கடன் அட்டை வட்டி வீதம் குறையலாம்

கொழும்பு, ஜூன் 4

இலங்கையில் கடன் அட்டைகளின் வட்டி வீதமும் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் அனைத்து கடன் அட்டைகளுக்கான வட்டி வீதங்களும் குறைவடையும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி வட்டி வீதத்தை குறைத்துள்ளதால், கடன் அட்டைகளின் வட்டி வீதத்தை குறைக்க எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ-இ)

# வட்டி வீதங்களைக் குறைத்தது இலங்கை மத்திய வங்கி!

கொழும்பு, ஜூன் 4

இலங்கை மத்திய வங்கி அதன் நிதிக் கொள்கையில் தளர்வுகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. நிலையான வைப்புகளுக்கான வட்டியை 13 சதவீதமாகவும், நிலையான கடனுக்கான வட்டியை 14 சதவீதமாகவும் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மத்திய வங்கி நிதிச் சபையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பணவீக்கம் குறையும் என இலங்கை மத்திய வங்கி கணித்துள்ளதுடன், நாட்டின் பணவீக்கம் கணித்த காலத்தை விட விரைவில் ஒற்றை இலக்கத்தை எட்டும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. மே மாத இறுதிக்குள், இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டுக் கையிருப்பு 3 பில்லியன் டொலரை விட அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், சீனாவால் வழங்கப்பட்ட அந்நியச் செலாவணி கடன் வசதியும் இதில் உள்ளடங்கும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிலையிலேயே பணவீக்கம் எதிர்பார்த்ததை விட வேகமாக வீழ்ச்சியடைதல் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கொள்கைகளை தளர்த்தும் நோக்கில் மத்திய வங்கி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. (ஏ-இ)

யாழ். மாவட்டத்தில்

# ஜனாதிபதி விருதுக்கு 10 பெண் சாரணர்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்முறையாக 10 பெண் சாரணர்கள் இம்முறை ஜனாதிபதி விருதை பெற்றுள்ளனர்.

இலங்கை முழுவதும் 700க்கும் மேற்பட்ட சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டுள்ளது. அதில் யாழ். மாவட்டத்திலிருந்து 25 சாரணர்கள் இந்த வருடத்துக்கான ஜனாதிபதி விருதைப் பெற்றுள்ளார்கள். 25 சாரணர்களில் யாழ். மாவட்டத்தில் முதல்முறையாக 10 பெண் சாரணர்களும் ஜனாதிபதி விருது கிடைக்கப்பெற்றுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து 8 பெண் சாரணர்களும், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியிலிருந்து பெண் சாரணர்களும் ஜனாதிபதி விருதைப் பெற்றுள்ளனர். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தென்மராட்சி பிக் பாஷ் லீக் (ரி.பி.பி.எல்.)

# பரபரப்புக்கு பஞ்சமில்லாத ஐந்தாம் நாள் ஆட்டங்கள்!

யாழ்ப்பாணம். ஜுன் 4

உதயன் ஊடக அனுசரணையுடன் பிரமாண்டமாக நடத்தப்படும் ரி.பி.பி.எல். (T.B.B.L. Thenmaradchi Big Bash League) தொடரின் ஐந்தாவது நாள் ஆட்டங்கள் நேற்று வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்த தொடரில் 10 அணிகள் பங்குபற்றுகின்றன.

நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் சாவா மாஸ்டர்ஸ் அணியும், சாவா ஸ்பாட்டன்ஸ் அணியும் மோதின. அதில் சாவா ஸ்பாட்டன்ஸ் அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர்ஸ் அணி 9.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக லக்சுதன் 16 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். சாவா ஸ்பாட்டன்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் தர்சன் 4 விக்கெட்டுக்களையும், பிரவீன் 2 விக்கெட்டுக்களையும், ஜெகதீஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்பாட்டன்ஸ் அணி 9.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 55 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக மைத்ரி 12 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், நுணாவில் டோமினேற்றர்ஸ் அணியும் மோதின. அதில் நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக கஜிந்தன் 29 ஓட்டங்களையும், சுகந்தன் 22 ஓட்டங்களையும், அருண் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் சுஜந்தன் இரு விக்கெட்டுக்களையும், ஜீவிதன் ஒரு விக்கெட்டையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக ஜதுர்சன் 47 ஓட்டங்களையும், ரொக்சன் 46 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

மற்றொரு ஆட்டத்தில் கைதடி போரேவர் அணியும், சாவா மாஸ்டர்ஸ் அணியும் மோதின. அதில் சாவா மாஸ்டர்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி போரேவர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக கனிஸ்ரன் 16 ஓட்டங்களையும், கெவின் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். சாவா மாஸ்டர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் கோபிகன் மற்றும் பிரதீபன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், லக்சுதன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர்ஸ் அணி 7.2 பந்துப்பரிமற்றங்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக தர்சன் 35 ஓட்டங்களையும், கோபிகன் 13 ஓட்டங்களையும், லக்சுதன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

மற்றொரு ஆட்டத்தில் நுணாவில் டோமினேற்றர்ஸ் அணியும், கைதடி சுப்பர் அணியும் மோதின. அதில் நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக ஜதுர்சன் 34 ஓட்டங்களையும், கவிந்தன் 27 ஓட்டங்களையும், ஜீவிதன் 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி சுப்பர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக கஜன் 35 ஓட்டங்களையும், ஜதீசன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் ஜீவிதன் 2 விக்கெட்டுக்களையும், தமிழ்நேசன் மற்றும் இளங்குமரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், சாவா ஸ்பாட்டன்ஸ் அணியும் மோதின. அதில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக அஜந்தன் 48 ஓட்டங்களையும், அருண் 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்பாட்டன்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களை மட்டுமே பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக தர்சன் 22 ஓட்டங்களையும், தனுஸ்ராஜ் 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாக நிலக்சன் மற்றும் மதிவதனன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், கவிராஜ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் சாவா மாஸ்டர்ஸ் அணியும், நுணாவில் டோமினேற்றர்ஸ் அணியும் மோதின. அதில் நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக தாரகன் 34 ஓட்டங்களையும், தசிந்தன் 12 ஓட்டங்களையும், தர்சன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் ஜதுரசன் 3 விக்கெட்டுக்களையும், தமிழ்நேசன் மற்றும் சுஜந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

புதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 5.4 பந்துப் பரிமாற்றங்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக ஜதுர்சன் 38 ஓட்டங்களையும், ஜீவிதன் 18 ஓட்டங்களையும், ரொக்சன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், கைதடி போரேவர் அணியும் மோதின. அதில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சஜீபன் 39 ஓட்டங்களையும், அருண் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி போரேவர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களை மட்டுமே பெற்று 40 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக பானு 17 ஓட்டங்களையும், இலக்கியன் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாக மதிவதனன் மற்றும் கவிராஜ் தலா 2 விக்கெட்டுக்களையும், ரஜிகரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (எ)

# மக்கள் தேர்தலை நம்புகின்றனர்; அரசாங்கத்தையே நம்பவில்லை!

## ரணிலுக்கு சஜித் பதிலடி

கொழும்பு. ஜுன் 4

உண்மையில் தேர்தல் மீதும், அரசியல் மீதும் மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. இந்த அரசாங்கம் மீதுதான் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அவர்கள் தேர்தல் ஒன்றை உடன் நடத்துமாறே கோரி நிற்கின்றார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'பொது மக்களில் பெரும்பாலானோருக்கு தேர்தல் மற்றும் அரசியல் மீது தற்போது நம்பிக்கையில்லை' என்று நுவரெலியா கிரேண்ட் ஹொட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய சட்ட மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேர்தல்களை ஒத்திவைத்து ஆட்சியைத் தொடரலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு காண்கின்றார். தேர்தல் மீதும், அரசியல் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்று ஜனாதிபதி பொய்யுரைக்கின்றார். தேர்தல் ஒன்றை நடத்தினால் மக்கள் ஆணை இந்த அரசாங்கத்துக்குக் கிடைக்காது என நூறு வீதம் தெரிந்த காரணத்தால்தான் ஜனாதிபதி இவ்வாறு பொய்யுரைக்கின்றார். உண்மையில் தேர்தல் மீதும், அரசியல் மீதும் மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. இந்த அரசாங்கம் மீதுதான் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அவர்கள் தேர்தல் ஒன்றை உடன் நடத்துமாறே கோரி நிற்கின்றார்கள் என்றும் சஜித் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதிக்குத் துணிவு இருந்தால் தேர்தல் ஒன்றை நடத்தி தற்போதைய அரசாங்கத்துக்கான மக்கள் ஆணையை நிரூபித்துக் காட்டட்டும் என்றும் அவர் சவால் விடுத்தார்.

எந்தத் தேர்தல் நடந்தாலும் ஐக்கிய மக்கள் சக்திதான் வெற்றிவாகை சூடும் என்றும் அந்தக்கட்சியின் தலைவர் சஜித் அடித்துக் கூறினார். (அ-ஒ.22)



# சங்காபிஷேகம்

ஏழாலை, ஜூன் 4

குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழாவின் அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை முதலாம் திகதி மு.ப. 10மணிக்கு அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

வசந்தமண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காளி அம்பாள் அலங்கார நாயகியாக அடியவர்கள் புடைசூழ வீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெற்றது. (ஒ-ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுகாதாரச் சீர்கேட்டுடன் விசுவமடு மீன்சந்தை!

## அதிகாரிகள் அசமந்தப்போக்கு; பொதுமக்கள் கடும் விசனம்



**கிளிநொச்சி, ஜூன் 4**

**புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குட்பட்ட விசுவமடு மீன் சந்தை சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வருகின்றது. மீன்சந்தையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், மக்கள் பயன்படுத்தப்படும் ஆற்றில் கலக்கவிடப்படுகிறது என அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இதுதொடர்பில் பொதுமக்கள் தெரிவித்ததாவது:

பல வருட காலமாக குறித்த சந்தையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மக்கள் பயன்படுத்தும் ஆற்றில் கலக்கவிடப்படுகின்றது. அத்துடன் மக்கள் பயன்படுத்தும் கால்வாயினூடாகக் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் சந்தை வளாகம் உள்ளிட்ட அயற்பகுதிகள் முழுவதும் துர்நாற்றம் வீசுகின்றது. இந்தச் சந்தையின் முறையற்ற நிர்வாக நடவடிக்கைகளால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. இதுதொடர்பில் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை மற்றும் சுகாதாரப் பிரிவினருக்குப் பலமுறை தெரியப்படுத்தப்பட்ட போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே இந்தச் சந்தையின் சுகாதாரச் சீர்கேடு தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம்செலுத்தி, உரிய நடவடிக்கை எடுத்து கழிவுநீரை முறையாக வெளியேற்றுவதற்கு வழிவகுக்க வேண்டும் - என்றனர். (ச-113)



# பொசனை முன்னிட்டு கோப்பாயில் உணவு

யாழ்ப்பாணம், ஜூன் 4

பொசன் பண்டிகையை முன்னிட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று அன்னதானம் வழங்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-26)

# புதுக்குடியிருப்பில் பொசன் வழிபாடு!

**முல்லைத்தீவு, ஜூன் 4**

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பொசன் தினமான நேற்றையதினம் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

பொசன் கூடுகளால் அலங்கரிக்கப்பட்டு தென்னிலங்கையிலிருந்து பிரித் ஓதுபவர்கள் வரவழைக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன. வழிபாடுகளைத் தொடர்ந்து வீதியால் செல்லும் மக்களுக்கு குளிர்களிகளும் பரிமாறப்பட்டன. நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் ஆலோசனைக் குழுத் தலைவர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (ச-19)

# மஹோற்சவம்

ஏழாலை, ஜூன் 4

குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், 17 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலயப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ரி-66)



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவப் பெருந் திருவிழாவுக்கான பந்தற்கால் நடும்நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ம-ரி.66)




47ஆவது சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் அண்மையில் நடைபெற்றது. இதில் கூடைப்பந்தாட்டப் போட்டியில், வடமாகாண ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் இரண்டாம் இடத்தைப் பெற்றன. (ம)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 43ஆவது பிறந்த நாளில் 15ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 04 . 06 . 1980

உதிர்வு 31 . 05 . 2008



## யோகரட்ணம் கீதன்

(Ceylinco Insurance)

"நெருகல் உளன் ஒருவன் இன்றில்லை என்றும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என்ற வள்ளுவரின் வாக்கை மெய்ப்பித்து எம்மையெல்லாம் அதிர்ச்சியிலும் ஆறாத்துயரிலும் ஆழ்த்திவிட்டு பெருமையுடன்அமரராகிய கீதனின் நீங்காத நினைவுகள் பதினைத்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் அன்று போல் இன்றும் கலங்கித்தவிக்கின்றோம்.

"பாசமிகு மைந்தனாய்
நேசமிகு சகோதரனாய்
நட்புலகின் நாயகனாய்
பரியோவானின் மாணவனாய்
இன்முக சீலனாய்

பன்முகம் காட்டி எம்மை தவிக்கவிட்டு பாதி வழிசெல்வதற்கா உன்னை மகனாகப் பெற்றோம் என பரிதவிக்கவிட்டு சென்றுவிட்டாய் மரணத்தின் பின்பும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்"

என்ற நம்பிக்கையோடும் தினம் தினம் உன் நினைவுகளோடும்
உன் அமைதிக்காய் இறையருளை யாசிக்கும்

இல. 18/1, காட்டுகந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(cs 50648) (N-1)

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 10 . 1966

இறப்பு 31 . 05 . 2023



## திருமதி செல்வம் ஜெயக்குமாரி (ஜெயா)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமான திருமதி செல்வம் ஜெயக்குமாரி (ஜெயா) கடந்த (31.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து பசுபதி - விஜயலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மகளும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நன்னியன் சீனி - நாகி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், சீனி செல்வத்தின் அன்பு மனைவியும், லக்சுமியின் அன்புத் தாயாரும், கனகராசா (ரவி - ஆசிரியர்), இரத்தினராசா (சேகர்), ஆனந்தராசா (ஜோச்), சந்திரன் பிறேமகுமாரி (பிறேமா - முன்பள்ளி ஆசிரியை), விஜயகுமாரி (யாழினி), இராஜகுமாரி (ஜெசிந்தா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், முத்துலிங்கம், தேவராஜா, ஜெயராஜா, மல்லிகாராணி, பவளராணி, பராசத்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.11, முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/50670)AH-1

021 222 8017

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 16.05.2022 அபரபக்ஷ பிரதமை
திதியில் சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

அமரர்

## இராசா பொன்குமார்

(உரிமையாளர் -
ஐங்கரன் வெதுப்பகம் - கோப்பாய்,
ஐங்கரன் வெதுப்பகம் - தட்டாதெருச்சந்தி
சரஸ்வதி விலாஸ் - கோப்பாய்,

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் மறக்கவில்லை
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஈரவிழி காயவில்லை
மாண்டு போன உங்கள் நிழல்
மாறாதாம் எம் நினைவில்.

தோற்றம் 30.05.1956

மறைவு 16.05.2022

இல.30, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(cs 50667) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 03 . 1964



மறைவு 01 . 06 . 2023

## திருமதி பாலேந்திரன் செல்வராணி

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலேந்திரன் செல்வராணி கடந்த (01.06.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அல்பிரட் வியாகுலம்மாவின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பாலேந்திரனின் பாசமிகு மனைவியும், தர்சன், கேசன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சீராளராசா, செல்வரத்தினம் (கமலா), ஆனந்தராசா இந்திராணி, இராஜவேலு, புஸ்பராணி, யோகராணி, செல்வகுமார் ஆகியோரின் சகோதரியும், சரோஜினிதேவி, சாந்தகுமாரி, மகேந்திரராஜா, வேலழகன், தவமோகன், நந்தினி, புஸ்பராணி, காலஞ்சென்ற ஆனந்தராணி மற்றும் அமிர்தராணி, ஆனந்தராசா, வசந்தராணி, கமலராணி, விமலராணி ஆகியோரின் மைத்துனியும், பட்டம்மாவின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**
**077 800 9082**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS25124)N-1

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் . 18 . 05 . 1960



ஆண்டவன் மடியில் . 29 . 05 . 2023

## பாலத்துரை ஜெயசிங்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலத்துரை ஜெயசிங் அவர்கள் கடந்த (29.05.2023) அன்று காலமானார்.

அன்னார் அமரர் பாலத்துரை சுமனாவதி தம்பதியரின் அன்பு மகனும், இரட்ணசீலி அவர்களின் கணவரும், அருண்ராஜ், தர்மராஜ், அபிதா ஆகியோரின் தந்தையும், ஜெயக்குமார், அமரர் ஜெயராஜ், ஜெயந்தி, ஜெயசங்கர், ஜெயராணி, ஜெயகாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வாசஸ்பதி, லதா, கலாதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சிகா, விதுராஜ், கிசானு, ரிசானு, ஜெயலதன், ஜெயலதுஷன், ஜெயலக்ஷன் ஆகியோரின் பெரியப்பாவும், கிருஜெனா, கிருஷான், டானுஜா ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை கோம்பயன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**173/1, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்புக்கு: 077 8002 775**

(CS 25135) A-1

# மரண அறிவித்தல்

## திரு. ஐயாத்துரை தியாகராசா

### (முன்னாள் சென் ஜோன்ஸ் அக்கடமி ஆய்வுகூட உதவியாளர்)



**தோற்றம் 02.09.1936**
**மறைவு 01.06.2023**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அராலி, மாவிட்டபுரம் மற்றும் மல்லாகத்தினை வதிவிடமாகவும் கொண்ட திரு. ஐயாத்துரை தியாகராசா கடந்த (01.06.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், சாந்தகுமார் (லண்டன்), தேவகுமாரி (சுவிஸ்), மீனகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், சுஜீதா (லண்டன்), சிவபாலன் (சுவிஸ்), பார்த்தீபன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், ஆதித்திரா (லண்டன்), அஸ்லி (லண்டன்), சுகர்னன் (சுவிஸ்), சுதர்ஜா, பரதன் (சுவிஸ்), சுதர்மா (சுவிஸ்), அதிசன் (சுவிஸ்), பாரதன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, சரஸ்வதி, காலஞ்சென்ற நடராசா, சிவனேசன், விக்கினேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற முத்துக்குமார், காலஞ்சென்ற சந்திரா, சண்முகம், காலஞ்சென்ற செல்லம்மா, தவமணி, காலஞ்சென்ற செல்வராசா, காலஞ்சென்ற கந்தையா, தர்மலிங்கம், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், காலஞ்சென்ற செல்லத்துரை, நாகம்மா, சந்தானலட்சுமி, காலஞ்சென்ற சிவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது மல்லாகம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் வீதி,**
**மல்லாகம்.**

(cs.50682 (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இராஜவீதிக்கு அண்மையில் 1 1/2 பரப்பு. 2 பரப்பு விற்பனைக்குண்டு.

**077 6011 135**

## காணி விற்பனைக்கு

யாழ். கல்வியங்காடு வேளாதோப்பில் நி.பர 01 குழி 09.16 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் விற்பனைக்கு

**077 877 8803, 075 649 3354**

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**077 781 3417**

## A/L இணைந்த கணிதம்

A/L 2023 மாணவர்களுக்கான வினா விடை வகுப்புகள் தனியாகவோ or குழுவகவோ கற்பிக்கப்படும்.

**077 832 4002**

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஜின்னா வீதியில் மேல் வீடொன்று வாடகைக்கு உள்ளது. 4 பேர் கொண்ட சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

**077 482 3891**

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான நிறுவனத்தில் கடமையாற்ற **பாதுகாப்பு உத்தியோகத்தர்** தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 585 4315**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமன்டலை, கருங்காலி, காயா கொலன்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம் கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## ஐரோப்பிய நாடுகளுக்கான Tourist விசா

**Schengen Visa** 27 நாடுகளுக்கு பயணிக்கலாம்

சுற்றுலா விசாவினை பெற்றுக்கொள்ள நாட வேண்டிய நம்பகரமான ஒரே இடம் EUROPE LINK

• வயதெல்லை 27க்கு மேல் | விசாவிற்கு பின் கட்டணம்



Italy France Greece Switzerland

பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

0742 555 319 | 0117 005 877
0763 915 660
info@europelinkedu.com
www.europelinkedu.com

EUROPE LINK

## வீடு வாடகைக்குத் தேவை

கோண்டாவில் - இருபாலை வீதிக்கு அண்மையாக (1 1/2 km தூரத்தில்) கோண்டாவில், இருபாலை, கோப்பாய், கல்வியங்காடு உட்பட்ட பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 557 4325**

## விற்பனைக்குண்டு

6 அடி நீளமும், 6 அடி அகலமும் கொண்ட 3 நூல் கம்பியினால் செய்யப்பட்ட நாய்க்கூடு உடன் விற்பனைக்குண்டு.

**திரு.செல்வம்**
**இல.107, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 910 7153**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் நல்லொழுக்கமுடைய பணிப்பெண் தேவை.

**077 308 3007**

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எல்லா இனத்தவர்கள் வெளிநாடு, உள்நாடு, உத்தியோகம், உத்தியோகம் இல்லாதவர்கள், எல்லோருக்கும் விரைவாக திருமண ஒழுங்கு செய்து தரப்படும். ஆண் (V) அமெரிக்கா இந்தியா வருவார். சூரியன், செவ்வாய் 5ம் வீடு, சனி (1.5.7.10) இருக்கும் பெண்ணை எதிர்பார்க்கின்றோம்.

**தொடர்பு: வி. ஜெயந்தி**
**077 973 3183**

## வீடு, காணி விற்பனைக்கு

- ✔ சுன்னாகம்- 3 1/2 பரப்புவீடு- K.K.S வீதி- 35 மீற்றர்
- ✔ கோண்டாவில் டிப்போ- 7 1/2 பரப்பு பிரித்துக் கொடுக்கப்படும். - 100 மீற்றர் பலாலி வீதி

**077 104 8865**
**077 275 7484**

## காணியுடன் வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி வளாக வீதியில் 3/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு. (தரகர் தேவையில்லை)

**தொடர்பு: 076 739 2518**

## வாடகைக்கு

யாழ். சிவன்பண்ணை வீதியில் சிறிய கடையுடன் புதிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகமாகவும் பாவிக்கலாம். புறோக்கர் வேண்டாம்.

**076 023 9797**

## மணமகன் தேவை

இளமைத் தோற்றமுள்ள அழகிய 40 வயதுடைய உயர்தொழில் புரியும் மணமகளுக்குப் பொருத்தமான முன்னேற்றமான சிந்தனைப் போக்குள்ள (43-49) வயதுக்குட்பட்ட மணமகன் தேவை.

**vinor6000@gmail.com**

## காணி விற்பனைக்கு

அரியாலை A9 வீதியில் இருந்து 800m தூரத்தில் அரியாலை கிழக்கு பூம்புகாருக்குச் செல்லும் பிரதான வீதி முகப்பில் உள்ள காணி விற்பனைக்குண்டு.

**Whatsapp: 0041 786 216661**

## Visa

இத்தாலி செல்ல விரும்புபவர் களுக்கு அரிய வாய்ப்பு. அங்கு சென்ற பின்னரே பணம் செலுத்த வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**

**074 189 2904,**
**076 420 7221**

## வேலையாள்கள் தேவை

AD வகை சாரதி அனுமதிப் பத்திரமுள்ள சாரதி, விநியோக வாகனத்திற்குத் தேவை. கொக்குவில், கோண்டாவில், உரும்பிராய், திருநெல்வேலி போன்ற இடங்களை அண்மித்த பகுதியிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**077 009 0189**

## கோயில் உதவியாளர் தேவை

**யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு**
கோயில் வேலைகள் தெரிந்த உதவியாளர் தேவை. விருப்பமுடையோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**பிற்பகல் 3.00 மணிமுதல்**
**பிற்பகல் 6.00 மணிவரை**

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30மணிக்கு சப்பரத் திருவிழாவும், 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்கு தேர்த்திருவிழாவும், 17 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ஒ-ரி-66)

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உயர் பதவியிலுள்ளோர், வங்கியியலாளர், நில அளவையாளர், சட்டத்தரணிகள், ஆசிரியர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் என பல்லாயிரக்கணக்கான வரன்கள் எம்மிடம் உள்ளனர்.

உடனடியாக மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**Tel: 021 222 9306, 077 138 7596, 071 9999 306**

## உழவர் அரிசிக்கடை மருதனார்மடம் சந்தை மலிவு விற்பனை 05.06.2023-10.06.2023

| | | |
|---|---|---|
| உழவர் ஆட்டக்காரி அரிசி | 1 Kg | Rs.160.00/= - (10 Kg Rs.1600.00) |
| அரிசி தீட்டல் | 1 Kg | Rs.155.00/= |
| தரமான வறுத்த அரிசிமா | 1 Kg | Rs.180.00/= |
| தரமான கறி மிளகாய்தூள் | 500 gm | Rs.900.00/= |
| தேங்காய் எண்ணை | 1 L | Rs.850.00/= |
| ஆனைக்கோட்டை நல்லெண்ணை | 750 ml | Rs.1400.00/= |

மேலும் பல பொருட்கள். (கடை சந்தையின் உள்ளே)

**தொடர்பு:- 076 2878 157**

## வீடு விற்பனைக்கு

கொழும்பு கந்தானையில் 20.5 Ph காணியில் 4 படுக்கை அறைகள் 2 குளியலறைகள், வரவேற்பு அறை, சமையல் அறை, சாப்பாட்டு அறை, சிறுவர்களுக்கான விளையாடும் பகுதி, வாகனத்தரிப்பிட வசதி, மின்சாரம், நீர் வசதி மற்றும் மின்பிறப்பாக்கி, CCTV Camera பொருத்தப்பட்டுள்ளது. வீட்டுவரைபடமும் உள்ளது. 1350 சதுர அடி கொண்ட வீடு விற்பனைக்குள்ளது.

**தொடர்பு: 077 333 6420, 077 333 6885**
**(விலைபேசித் தீர்மானிக்கலாம்)**

## காணவில்லை



பெரியகல்லாறைப் பிறப்பிடமாகவும், இல. 179/4, இராமலிங்கம் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட **கிருஸ்ணபிள்ளை கிருஷ்ணகரன் (வயது - 51)** என்பவரை **02.06.2023 காலை 9.45 மணியிலிருந்து** காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:-**
**077 276 7236**

## வீடு வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் US Hotel இற்கு அருகாமையில் 5 படுக்கை அறைகள், வரவேற்பறை 3, குளியலறை 3 மற்றும் சமையலறை, உதவியாளர்கள் தங்கும் அறையை கொண்ட விசாலமான வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: **1. 076 551 3820**
**2. 075 041 5867**

## காணி விற்பனைக்கு

யாழ். கல்வியங்காட்டில் 3 ஆம் கட்டை வாசிகசாலை ஒழுங்கையில் 4 பரப்புக்காணி பயன்தரு மரங்கள், கிணறு, மின்சார வசதிகளுடன் விற்பனைக்குண்டு.

**077 625 0698**

## ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை மானிப்பாய் பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கான உரிய விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்போர் குறிப்பிட்ட பாடங்களில் அரச பல்கலைக்கழக பட்டதாரியாகவும் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**பாடங்கள் :**

1. **ஆங்கிலம்** - English
2. **பௌதீகவியல்** - Physics
3. **தமிழ்மொழியும் இலக்கியமும்** - Tamil Language and Literature

தகுதியான விண்ணப்பதாரர்கள் **09.06.2023** அன்று அல்லது அதற்கு முன்பதாக நேர்முகத்தேர்வுக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**021 225 5628 / 077 615 9637**

**- பாடசாலை நிர்வாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 08 . 1949

மறைவு 27 . 05 . 2021

## அமரர் Dr. நடராசா கிருஸ்ணராசா

(ஆயுள்வேத வைத்தியர் – ஆ. நடராசா சுதேச வைத்தியசாலை சுன்னாகம்)

திதி:–04.06.2023

ஆலம் விழுது போல – உறவு
ஆயிரம் இருந்தும் என்ன?
வேரென இருந்த நீங்கள்
விரைந்தோடிச் சென்றதால்


வீழ்ந்துவிட்டோம் நாம் மனதால்
விழிநீர் சொரிய
விரைந்தோடி விட்டது – ஈராண்டு

இதயம் வலிக்க என்றுமே உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

(CS/50652)AH-1

# மரண அறிவித்தல்



தோற்றம் . 15 . 03 . 1944

மறைவு . 02 . 06 . 2023

## திரு.வயிரமுத்து செல்லையா

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வயிரமுத்து செல்லையா நேற்றுமுன்தினம் (02.06.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கர்லஞ்சென்றவர்களான வயிரமுத்து சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் வள்ளியம்மை தம்பதிய ரின் மருமகனும், சிவமணியின் அன்புக் கணவரும், இராசமலர், இராசசிங்கம், றஞ்சிதமலர், தவமலர், அரியமலர் (லண்டன்), குணசிங்கம், ஜீவமலர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), விஜயமலர், ஜெயமலர் (ஆசிரியர் - யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியால யம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராசா, சுதாகரன், யோகராசா, சிவரூபன் (லண்டன்), சிவகலா, நிசாந்தன் (பிரதேச செயலகம் துணுக்காய்), ஹெயின்ஸ், விஜயராகவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நாகம்மா, மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா, இலட்சம்மா, இளையபிள்ளை, நல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, செல்வரத்தினம், குணானந்தராசா, அற்புதலிங்கம், சிவலிங்கம், ஹரிகரன் மற்றும் லீலாவதி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி, சிவபாக்கியம், கோவிந்தராசா, சகுந்தலாதேவி, அசோகன், பராசக்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனனும், சிந்துஜா, சுகிர்தா சாதனா, சஜிகா, மகாசக்தி, கஜேந்தினி, சத்தியபாலன், அயூஸ்மன் (லண்டன்), அனுஸ்கா (லண்டன்), அபிநயா, அபர்ணா, அஜந்தன், அபிசனா, அட்சஜன், கயாணன், டிசானி, மதுமிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுத்திகிரியைகள் இன்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தேத்தாகலடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

தொடர்பு: 077 104 2212
077 812 4139, 077 343 2781

தகவல்:
குடும்பத்தினர்

cs.44720

# மரண அறிவித்தல்



பிறப்பு 03 . 07 . 1938

இறப்பு 03 . 06 . 2023

## திருமதி நாகம்மா தர்மராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் தொல்புரத்தை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட திருமதி நாகம்மா தர்மராசா (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்கள் நேற்று 03.06.2023 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தர்மராசாவின் அன்பு மனைவியும், அன்பரசி, அருளரசன் (சில்லாலை றோ.க.த.க. பாடசாலை), அம்பிகா (பிரதேச செயலகம்- காரைநகர்), ஜீவானந்தன் (வ/ விபுலானந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சற்குணராசா, கல்யாணி, விஜயகுமார், லிகிதமாலா ஆகியோரின் மாமியாரும், சிவஜனனி, சிவறூபன், சிவதர்சனா, இராகவன், முரளிதரன், அபிராமி, திவானுஜன், புவனிஷா ஆகியோரின் பேர்த்தியும், சங்கவி, தரணியன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அரசடி வீதி வடலியடைப்பில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ச.அன்பரசி-0752582399
த.அருளரசன்-0777803488
வி.அம்பிகா-0774033074
த.ஜீவானந்தன்-0778836742

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் . 18 . 01 . 1950

மறைவு 03 . 06 . 2023

## திருமதி அஞ்சலினா தவராசா

(முன்னாள் முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

ஏழாலை தெற்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அஞ்சலினா தவராசா நேற்று (03.06.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தவராசாவின் அன்பு மனைவியும், கிமால் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் - உடுவில்), றுபேட் எமில்ரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், டெனிசாவின் அருமை மாமியாரும், யோண் ஹென்றிகின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை ஐயாத்துரை, அன்னம்மாள் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், ராசம்மா தம்பதியரின் மருமகளும், பெஞ்சமின் இராசநாயகம் (அமரர்), நீற்றா அருள்நாயகி, இமல்டா தவமணிதேவி, லியோனி நவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிலோமினா தேவரட்ணம், ஆசீர்வாதம் (அமரர்), இராதாகிருஷ்ணன் (அமரர்), டயோனிசியஸ் பாலரட்ணம், சரஸ்வதி (அமரர்), உருக்குமணி, சத்தியபாமா, யோகராசா, தங்கவேல், அமரர் அருமைத்துரை, மகாநந்தம், சர்மிலா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (05.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித இசிதோர் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: 077 410 9151
077 118 3502

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25137) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சின் செயலராக சாகல ரத்னாயக்கா நியமனம்?

கொழும்பு, ஜூன் 4

பாதுகாப்பமைச்சின் புதிய செயலாளராக சாகல ரத்னாயக்க நியமிக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலராக ஜெனரல் கமால் குணரத்ன இருக்கும் நிலையில் புதிய செயலராக சாகல நியமிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மேற்குத் தொகுதியின் புதிய அமைப்பாளராகவும் ஜனாதிபதி பணியாளர் குழாமின் பிரதானியாகவும் சாகல ரத்னாயக்க தற்போது பணியாற்றி வருகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடத்தப்படலாம் என எதிர்பாக்கப்படும் நிலையில் அதற்கு முன்னதாக அரச நிர்வாக சேவையில் பல மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஓ.இ)

உறவினர் வீட்டில்

# வங்கி அட்டையைத் திருடி நகை வாங்கிய யுவதி கைது!

வவுனியா, ஜூன் 4

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய பெண் ஒருவரின் வங்கி அட்டையைத் திருடி அந்த அட்டையைப் பயன்படுத்தி தங்க நகைகளை கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் 24 வயதுடைய யுவதி ஒருவர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சந்தேக நபர் வவுனியா, குருமன்காடு பகுதியிலுள்ள தனது உறவினரின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, அங்கு கடன் அட்டையை திருடிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அட்டையின் மூலம் 13 இலட்சத்து 8 ஆயிரத்து 899 ரூபா பெறுமதியான நகைகளை அவர் கொள்வனவு செய்துள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 2 வளையல்கள், 1 சங்கிலி மற்றும் 2 தோடுகள் உட்பட தங்க நகைகள் மற்றும் பல பொருள்களை அடகு வைத்த பற்றுச்சீட்டையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

(அ-ஓ,18,110)

இந்திய ரயில் விபத்தில்

# உயிரிழந்தோருக்கு ரணில் இரங்கல்

இந்தியாவின் கிழக்கு ஒடிசா மாநிலத்தில் ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானமை தொடர்பில் கேள்வியுற்று மிகுந்த கவலை அடைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள விசேட செய்தியில், துயரமான இந்தத் தருணத்தில் அயல் நாட்டவர்கள் என்ற வகையில் இலங்கை அரசாங்கமும் மக்களும் இந்தியாவுடன் கைகோர்த்து நிற்போம் எனவும் உறுதியளித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதேநேரம் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார். எதிர்பாராத விதமாக விபத்துக்கு முகம் கொடுத்துள்ள இந்திய அரசாங்கத்துக்கு வலிமையும் தைரியமும் கிட்ட வேண்டுமென பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதியின் விசேட செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ஓ.இ)


இந்த சிறப்பு செய்தியை வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு பகிரவும்

(Photo) புகைப்படம் மூலம் பகிரவும்!

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் நண்பர் சொந்தங்களுக்கு மூலம் share செய்யுங்கள்.

இலங்கைக்கு வருகை தராமல்

வஜிர வீட்டைக் கட்டியமைக்கலாம்.

(வாழ்நாள் உத்தரவாதத்துடன்)

→யாழ்ப்பாணம் →வவுனியா →கண்டி →மன்னார் →கொழும்பு →முல்லைத்தீவு

139 இலட்சம் - 40 இலட்சம் (Big) Discount = House Value 99 இலட்சம் ✓

ரூ10,000 ✓ செலுத்தி வீட்டு வேலையை ஆரம்பிக்கலாம்.




VIDEOS உள்ளன அனுப்ப என்னை அழைக்கவும்

69 இலட்சம் - 10 இலட்சம் (Big) Discount = House Value 59 இலட்சம் ✓



Pay Rs. 10,000 to start work

24 hrs 071 593 3299



1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக

பிரித்தானிய ஆட்சிக்கால வரலாறு உடைய Mr. டைரோன் மேலாளர்

வஜிர ஹவுஸ்

23, டீல் பிளேஸ் A, கொள்ளுப்பிட்டி



LAND WANTED

நிலம் அல்லது வீடு நீண்ட கால வாடகைக்கு தேவை.

யாழ்ப்பாணம் A9 பிரதான வீதிக்கு அருகில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் 120 பேர்ச் காணி அல்லது வீட்டுடன் கூடிய காணி நீண்ட கால வாடகைக்கு தேவை. தயவுசெய்து விலையை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

Vajira House Company

071 593 3299

1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையின்

வஜிரா ஹவுஸ் நிறுவனம்

23, டீல் பிளேஸ் A, கொள்ளுப்பிட்டி


## வேலையாள்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு காங்கேசன்துறையில் (K.K.S) வேலை செய்வதற்கு மேசன், கூலி, உப ஒப்பந்தகாரர் தேவை.

077 239 7211

## வீடு வாடகைக்குத் தேவை

நிறுவனமொன்றிற்கு யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் விசாலமான வீடு வாடகைக்குத் தேவை.

Tel:077 9592 628

CR 39958 A-1

## உடனடி வேலைவாய்ப்பு

காப்புறுதித் துறையில் அனுபவமுள்ள, ஆர்வமுள்ள, O/L எடுத்த தற்போது வேலை செய்பவர்கள் மற்றும் அனைவருக்கும் முழுநேர/ பகுதிநேர வேலைவாய்ப்பு

076 112 4145

## கொழும்பில் வீடு வாடகைக்கு

கொழும்பில் படிக்கும் மாணவர்களுக்கும், காரியாலய தேவைக்கும் (office), குடியிருப்பதற்கும், யாழில் இருந்து கொழும்பு வருபவர்களுக்கும் மாத/ நாள் வாடகைக்கு வீடு/ அறைகள் வழங்கப்படும்.

076 112 4145

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கட்டப்பிராயில் நி.ப: 11/2 2 குழி காணி விற்பனைக்குண்டு. (ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.)

தொடர்பு: 076 497 1844

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை தங்கம்மா

பொன்னையா வீதி, பன்னாலை தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கம்மா அவர்கள் நேற்று (03.06.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்) மற்றும் காலஞ்சென்ற முருகையா (ராசன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீதுர்க்கானந்தன் (அரச நில அளவையாளர்), ஸ்ரீபிரகாசினி (ஜேர்மனி), தயாளினி (இலங்கை வங்கி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), தர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), பிரசன்னா (பிரான்ஸ்), பிருந்தாபன், லக்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தேவதாஸ் (ஜேர்மனி), சதீஸ்கரன் (பிரதி அதிபர், திருநெல்வேலி முத்துத்தம்பி ம.வி), கமலராஜ் (அரச கணக்காய்வு அலுவலர் ( கொழும்பு), ஆர்த்திகா (ஆசிரியர், நாகேஸ்வரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சுன்னாகம்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

CS 25140 A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலையில்...

மாணவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் 'மாகோஸ்' வார நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற நிலையில் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வின்போது இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர் களுக்கும், மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு இடை யில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியபோதி லும் பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்களின் தலையீட் டையடுத்து சுமுக நிலைமை ஏற்பட்டது.

மீண்டும் நேற்றுமாலை இரு அணிகளும் மைதானத் தில் வாக்குவாதத்தில் ஈடுபட்டன. வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியபோது இரண்டாம் அரையாண்டு மாணவன் மூன்றாம் வருட மாணவன் மீது கடுமை யான தாக்குதலை மேற்கொண்டுள்ளான். இதன்போது தாக்குதலை மேற்கொண்ட மாணவன், கையில் அணிந்திருந்த உலோகக் காப்பால் மூன்றாம் வருட மாணவனின் தலையில் தாக்கியதன் காரணமாக கடும் காயம் ஏற்பட்டது. அவர் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ஒ.5)

## தையிட்டி விகாரையில்...

வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன. இதற்காக தென் னிலங்கையிலிருந்து சிங்கள மக்கள் அழைத்து வரப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.27)

## சமூகச்...

யுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் நேற்று சனிக்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆசி ரியை ஒருவர் தங்குவதாகக் கூறி வீடொன்று வாட கைக்கு எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அங்கு தங்கியி ருந்த பெண்மணி, ஆசிரியை அல்ல என்று அயலவர் கள் தெரிவிக்கின்றனர். வீட்டில் வாடகைக்கு இருந்த பெண்மணி வெளியில் செல்லும் நேரங்களில், குறித்த கத்தோலிக்க மதகுரு அந்த வீட்டுக்கு வருவதையும், அவர் வரும் சமயங்களில் பல இளம்பெண்கள் அங்கு வந்து செல்வதையும் அயலிலுள்ள மக்கள் அவதானித் துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று மதியமும் இளம் பெண் ஒருவ ருடன் கத்தோலிக்க மதகுரு அங்கு வந்துள்ள நிலை யில், சந்தேகமடைந்த அயலவர்கள் குறித்த வீட்டை முற்றுகையிட்டுள்ளனர். வீட்டினுள் மக்கள் சென்று பார்த்தபோது அங்கு சற்றுமுன் திறக்கப்பட்ட நிலை யில், மதுபானப் போத்தல்கள் காணப்பட்டுள்ளன. அதனுடன் கத்தோலிக்க மதகுருவின் வெள்ளை மேலங்கியும் அங்குள்ள கதிரை ஒன்றில் காணப்பட் டுள்ளது. அருட்தந்தையையும் அங்கு தங்கி நின்ற மன்னாரைச் சேர்ந்த 24 வயதான பெண்ணையும் பிடித்த பொதுமக்கள், தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

வாக்குமூலம் பெற்ற பின்னர் எச்சரிக்கையுடன் பிடிபட்ட இருவரும் விடுவிக்கப்பட்டனர் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ.26,125)

## துணைவேந்தர்...

பமும் உள்ளடங்குவதாகத் தெரியவருகின்றது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற் குணராஜாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஒகஸ்ட் 28ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவையின் பதவிவழிச் செயலரான பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான இறுதித்தினம் நேற்றுமுன்தினம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமையா கும். அன்றையதினம் பிற்பகல் 3 மணியுடன் துணை வேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல் நிறை வடைந்த வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மூவரும், கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்திருப்பதாக அறியமுடிகின்றது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற் குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரி யர் தி.வேல்நம்பி ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்தும், விலங்கியல் துறைப் பேராசிரியர் பி.வினோபாபா கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந் தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற் றறிக்கைக்கு அமைவாக எதிர்வரும் ஜூலை மாத முற் பகுதியில் நடத்தப்படவுள்ள விசேட பேரவைக் கூட்டத் தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் முன்னிலை யில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு, புள்ளிக ளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறு பவர்களின் விவரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். பல்கலைக்கழ கச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்து துணை வேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார். (அ-ஒ.5)

## ஹெரோய்ன்...

துன்னாலையைச் சேர்ந்த சிறுவன் பாடசா லையைவிட்டு இடைவிலகிய நிலையில், உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையாகியுள்ளான். விசாரணைகளின் போது வேறு பல சிறுவர்களும் அதனைப் பயன்படுத்துவதாகத் தெரிவித்துள்ளான். உயிர்கொல்லி ஹெரோய்ன் ஊசி மூலம் மேற்படி சிறுவன் பயன்படுத்திய நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவ லுக்கு அமைவாகவே கைது செய்யப்பட்டான் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## தையிட்டி...

அதிகளவான மக்கள் போராட்டத்தில் நேற்றுப் பங்கேற்றனர்.

யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்க ளான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல் வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங் கம் சுரேஸ், ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஷ் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

தையிட்டியில் அமைக் கப்பட்ட சட்டவிரோத விகா ரைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி இதற்கு முன்ன ரும் இரண்டு தடவை கள் போராட்டம் நடத்தி யிருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ-ஒ.27)

## பௌத்த..

வடக்கு - கிழக்கில் பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகள் தொட ருமானால் இந்தியா வில் உள்ள இந்து மத அமைப்புகளின் ஆத ரவைக் கோருவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பு ஆங்கில ஊடகத் துக்கு தெரிவித்திருந்த நிலையிலேயே மனோ கணே சன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'தமது நாட்டில் தோன்றிய பௌத்தத்தை மற்ற இடங்களி லும் வளர வேண்டும் என்றே இந்தியா விரும்பும் என் பதனால் இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்தியாவின் ஆதரவு கிடைக்கும் என்பதில் சந்தேகமே. பௌத்த மயமாக்கலைக் கட்டுப்படுத்த இந்தியாவின் உதவியைக் கோருவதற்குப் பதிலாக, இந்தப் பிரச்சி னைக்குத் தீர்வுகாண உள்ளூர் நடவடிக்கைகளை எடுக்க தமிழ் அரசியல்வாதிகள் முயலவேண்டும்' என மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)

## கஜேந்திரகுமார்...

விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் நேற்றுமுன்தினம் மாலை மக்கள் சந்திப்புக்காகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது அரச புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் தாக்கியதுடன், பொலிஸ் உடையி லிருந்த ஒருவர் துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டியி ருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்புச் செய் தியாளர் ஒருவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆகியோரிடம் நேற்று மாலை கேள்வி எழுப் பியபோதே அவர்கள் மூவரும் தமக்குத் தெரியாது என்று பதிலளித்துள்ளனர். (அ-ஒ.5.22)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு.
* 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* வட்டுக்கோட்டை மாவடி சந்தியிலிருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் இருந்து 200 m தூரத்தில். (உபவீதி. பிரதான காபற் வீதி முகப்புடன்)
* யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் 786 வழி இலக்க தனியார் அரச பேருந்துகள் செல்லும் வீதியில் இருந்து 200 m தூரம்.
* குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* நன்னீர் ஊற்று நிலம்
* மாவடி சந்தியிலிருந்து 800 m தூரத்தில்.

தொடர்பு: 076 7390 413, 076 733 6093

**காணி விற்பனைக்கு**

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 781 3417

**காணி விற்பனைக்கு**

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS24384)(J-1) 070 701 3060

**கடை வாடகைக்கு**

யாழ். நகர் அருகே மானிப்பாய் வீதியில் கடை வாடகைக்குண்டு.

076 928 2587

**வேலையாள்கள் தேவை**

• தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO)
• கணிய அளவியலாளர் (QS)

(BOQ, Bill அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்கவும்.
Must experience with preparing Bill and BOQ)

shaganaconstruction@hotmail.com

074 063 8216

**கடை வாடகைக்கு**

யாழ்.ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்குண்டு.

075 803 9586

**Classes For Engineering Technology**

உயர்தர மாணவர்களுக்கான
Engineering Technology
Subject Group or Individual
Classes B.Sc Eng
பொறியியலாளரால் கற்பிக்கப்படும்

076 745 3397

**தேவை**

கிளிநொச்சியில் உள்ள பிரபல மாபிள் விற்பனை நிலையத்துக்கு
• விற்பனை உதவியாளர்
• காசாளர் தேவை.
தொடர்புகளுக்கு

077 452 3408, 077 351 5980

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.
* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

தொடர்பு: 076 733 6047, 076 7558 606.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐ.நா. பொதுச் சபையில்

# இலங்கைக்கும் துணைத்தலைமை

ஐ.நா. பொதுச் சபையின் 78ஆவது கூட்டத் தொடரின் துணைத் தலைமைக்காக ஆசிய பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் முதல் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் வரை ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சார்பாக இலங்கை இந்தப் பதவியை ஏற்றுக்கொள்கின்றது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத் தலைமை நாடுகள், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் வீட்டோ அதிகாரம் கொண்ட ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளுடன் இணைந்து செயற்படவுள்ளன. (அ-ஒ,இ)


## காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் இராசவீதிச் சந்திக்கு அண்மித்து உள்ள கிருஸ்ணன் கோயிலுக்கு மேற்குப் புறமாக மானிப்பாய் வீதியிலிருந்து வடக்கே 20 மீற்றர் தூரத்தில் 3 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. நல்ல நீர் ஊற்று உள்ள கிணறு மற்றும் காய்க்கும் 7 தென்னை மரங்கள் உண்டு. வீடு கட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் வியாபார நோக்கத்துக்கும் உகந்த இடம். (CS/25104)AH-1

**077 310 1357**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்துக்கு கீழ்வரும் வேலைகளுக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் **திங்கள் முதல் புதன் வரை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.**

- Computer Billing (ஆண்/ பெண்)
- பில் கட்டிக் கொடுப்பவர் (ஆண்)
- Delivery செய்வதற்கு (ஆண்)

(CS/50653)AH-1

விநாயகர் ஸ்ரோஸ்
424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 419 5015**

## வேலையாட்கள் தேவை

யாழ். கோண்டாவிலில் இயங்கும் புடைவை விற்பனை நிலையமொன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

**077 9574 580, 076 3545 120**

## வாடகைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் கடை வாடகைக்குண்டு.
நீள் 30' - அகலம் 13'

(50675)AH-1

**075 037 5429**

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகர் மத்தியில் இயங்கும் Fancy Shop ஒன்றுக்குப் பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை.

(CS/50647)AH-1

Contact Number:- **076 129 7435**

## வாகனம் தேவை

**Aluminium Body**
அடித்த 10 1/2 அடிமுதல் 14 அடி வரை, கன்டர் ரக வாகனங்கள் வாடகைக்கு / விலைக்கு வாங்க தேவை.

**077 900 9541**

## விற்பனைக்குண்டு

வடக்கு மிருசுவில் வீதியில் A9 வீதி, புனித நீக்கொலர் ஆலயம், மிருசுவில் புகையிரத நிலையம் என்பவற்றிலிருந்து 100m தூரத்தில் வீட்டுடன் கூடிய 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS/50659)AH-1

**077 525 0882**

## பெண் வேலையாள்கள் தேவை

யாழ். நல்லூர் முடமாவடியில் இயங்கிவரும் தையல் நிலையத்துக்கு அனுபவமுள்ள பெண் வேலையாள்கள் தேவை.

(25120)AH-1

**076 072 9576**

## Room வாடகைக்கு

யாழ். மருதனார்மடம் சந்திக்கு அருகாமையில் Room வாடகைக்கு உண்டு.
(பெண்களுக்கு மட்டும்).

**077 9574 580**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் நல்லொழுக்கமுடைய பணிப்பெண் தேவை.

**077 308 3007**

## தேவை

கிறைண்டிங் மில் வாடகைக்குத் தேவை. சிறிய ரக வாகன சாரதியும் தேவை.

(CS/50666)AH-1

**076 014 3022**

## ஆள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள பூங்கன்று விற்பனை நிலையம் ஒன்றுக்குப் பூங்கன்று, சாடிகள் பராமரிப்பதற்கு ஆண் ஒருவர் தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும்.

(CS/50625)AH-1

**076 381 0939, 077 836 2408**

## விற்பனைக்குண்டு

- பாவித்த குளிர்சாதனப் பெட்டி Sisil
- Tiger Petrol Generator 2.5KW
- Sandwich Toaster - 16 pcs
- Gas Coker
- ஊதுபத்தி Machine

விற்பனைக்குண்டு.

(CS/50638)AH-1

**077 755 6244, 077 758 3208**

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Mitsubishi Lancer (Japan) 12 SRI XXXX (Box Model) கார் விற்பனைக்குண்டு. அத்துடன் இவ்வாகனத்துக்கு High gear (05 gear) உண்டு.
விலை பேசித்தீர்மானிக்கலாம்.

(CS/25108)AH-1


**077 045 6898**

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Juice Bar மற்றும் BBQ Restaurant களுக்கான பாவனைக்கு ஏற்ற பொருள்கள் விற்பனைக்குண்டு. (CS/50656)AH-1

**075 549 4934**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த (17.05.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புச் செல்வம்

### அமரர் மேகேந்திரன் மகிந்தன்

*திதி: பிரதமை*

அவர்களின் முதலாம் ஆண்டு நிகழ்வு நாளை (05.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பூதர்மடம், கோப்பாய்.** (cs.50537) (N-I)

குடும்பத்தினர்

## 45ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (22.04.2023) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் சுப்ரமணியம் மகாதேவா

அவர்களின்
அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (03.06.2023) சனிக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு 05.06.2023 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CS 25114) A-1

**குடும்பத்தினர்.**

**இல.24/2, கணேசபுரம்,**
**கிளிநொச்சி.**
**077 387 2992, 076 5312 386**

**மகன்கள்**
**துஷியந்தன் (Norway)**
**ஜெயந்தன் (India)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தாலக் கனியொன் றினுக்காகத்
தரைமேல் மாந்தர் பலர்திரண்டு
வேல்கத் திகள்கொண் டெறிந்துமிக
விசயம் பொருதும் வளநாடன்
மால்பற் றியநெஞ் சினனாகி
வந்தான் கனகே மன்றலுக்கு
நீலக் கருங்கார் மேகநிற
நியூற்ற நிவன்காண் நேரிழையே!

- புலவர் நட்டுவச் சுப்பையனார்

பக்கங்கள்: 04

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆ[illegible] 2053 வை[illegible] ஞாயிற்றுக்கிழமை (04.06.20[illegible]3)



# ஒரு பொது நினைவுச்சின்னத்தை ஏன் உருவாக்க முடியாது?

○ நிலாந்தன்

போரில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒருபொதுவான நினைவுச்சின்னத்தை உருவாக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. தமிழ்க் கட்சிகளில் சில அதை எதிர்க்கின்றன. சில அதை ஆதரிப்பதாகத் தெரிகின்றது.

போரில் உயிர் நீத்த எல்லோருக்குமான நினைவுச்சின்னம் என்பது உலகில் ஏற்கனவே பல நாடுகளில் உண்டு. குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தில் போரில் உயிர்நீத்த அனைவருக்குமானதாக அது அமையும். அதற்கு முகம் இருக்காது. ஆளடையாளம் இருக்காது. அது போர் வெற்றியையும் பிரதிபலிக்காது. தோல்வியையும் பிரதிபலிக்காது. குறிப்பாக, நிலைமாறுகால நீதியின் ஒரு பிரிவாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அவ்வாறு நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்குப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமையுண்டு.

ஆனால் இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் நிலைமாறுகால நீதி தொடர்பான வாதப்பிரதிவாதங்களின்போது ஒரு விடயம் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. இலங்கைத்தீவில் நிலை மாற்றம் ஏற்படவில்லை என்பதே அது. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. உளவியல் மோதல் இப்பொழுதும் உண்டு. ஆயுத மோதல் ஒரு காரணம் அல்ல. அது விளைவுதான். ஆயுத மோதல்களுக்குக் காரணம் இன ஒடுக்குமுறைதான். எனவே இன ஒடுக்குமுறை முடிவுக்கு வரும்பொழுதே இலங்கைத் தீவில் நிலை மாற்றம் ஏற்படும். அதாவது போருக்குப் பிந்திய, அல்லது பிணக்குக்குப் பிந்திய, என்று அழைக்கத்தக்க ஒரு நிலை இலங்கைத்தீவில் இப்பொழுதும் ஏற்படவில்லை உதாரணமாக, தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. பொருத்தமான பொருளாதார விடுதலை இன்றுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் கறுப்பின மக்கள் ஒப்பீட்டளவில் அரசியல் விடுதலையை அனுபவிக்கும் ஒரு சூழல் அங்கே உருவாகிவிட்டது. அதனால்தான் நிலைமாறுகால நீதியை அங்கே ஒப்பீட்டளவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்க முடிந்தது.

ஆனால் இலங்கைத்தீவில் நிலைமை அப்படியல்ல. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. மோதல்களுக்குக் காரணமான இன ஒடுக்குமுறை இப்பொழுதும் உண்டு. அதனால்தான் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள - பௌத்த மயமாக்கல் எனப்படுவது இன ஒடுக்குமுறையின் ஒரு பகுதிதான். தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் அம்சங்களை அழித்து ஒழிப்பது, தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிப்பதுதான் இன ஒடுக்குமுறையின் பிரதான இலக்கு.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் அரசாங்கம் கூறுவதுபோல 2009க்குப் பின்னரான காலகட்டத்தை பிணக்குக்குப் பின்னரான அதாவது இனப்பிரச்சினைக்குப் பின்னரான காலகட்டம் என்று அழைக்கமுடியாது. அதுபோலவே அரசசார்பற்ற நிறுவனங்கள் அழைப்பதுபோல போருக்குப் பின்னரான காலகட்டம் என்றும் அழைக்கமுடியாது. மாறாக நான் எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதைப்போல, ஆயுத மோதல்களுக்குப் பின்னரான காலகட்டம் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் உளவியல் மோதல்கள் இப்பொழுதும் உண்டு. ஆயுத மோதல்களின் போது கைப்பற்றப்பட்ட நிலங்கள் இப்பொழுதும் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அங்கெல்லாம் அவர்கள் விகாரைகளை அமைத்து சிங்கள - பௌத்த மயமாக்கலை முன்னெடுத்து வருகிறார்கள். உயர் பாதுகாப்பு வலயங்கள் இப்பொழுதும் உண்டு. இலங்கைத்தீவின் மொத்தப் படைக் கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி வடக்குக் கிழக்கில்தான் உண்டு. போர் முடிவுக்கு வந்துவிட்டது என்றால் எதற்காக அளவுப் பிரமாணத்துக்கு அதிகமாக படையினரை தமிழ்ப் பகுதிகளில் பேண வேண்டும்? கண்ணுக்குத் தெரியாத ஓர் எதிரிக்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்தும் தன்னைத் தயார்ப்படுத்தி வருகின்றதா?

அதுதான் பிரச்சினையே. அரசாங்கம் தமிழ்மக்கள் தேசமாக இருப்பதனை அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. அதனால்தான் தமிழர்கள் தேசமாக இருப்பதை அழிக்கும் விதத்தில் சிங்கள பௌத்த மயமாக்கலை திணைக்களங்களுக்கூடாக முன்னெடுக்கின்றது. எனவே இலங்கைத்தீவில் கடந்த 14 ஆண்டுகளாக நிலவி வரும் அரசியற் சூழலை ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு காலகட்டம் என்றுதான் அழைக்க வேண்டும். இங்கு நிலை மாற்றம் ஏற்படவில்லை.

அவ்வாறு நிலை மாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில், போரில் உயிர்நீத்த அனைவருக்கும் ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கமுடியாது. அதை போரில் சம்பந்தப்பட்ட அனைவரும் அல்லது போரால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கில்லை. அவ்வாறு அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழல் எப்பொழுது தோன்றும் என்றால், மெய்யான பொருளில் நிலைமாற்றம் ஏற்படும் பொழுதுதான். இங்கு நிலை மாற்றம் எனப்படுவது இன ஒடுக்குமுறை முடிவுக்கு கொண்டு வரப்படுவதுதான். அதாவது இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்குவதுதான். எனவே இப்பொழுது விடயம் தெளிவாகத் தெரிகிறது. இலங்கைத்தீவின் பல்லினச் சூழலை-பல்மதச் சூழலை-பல மொழிச் சூழலை உறுதிப்படுத்தாதவரை நல்லிணக்கத்தை அதன் மெய்யான பொருளில் கட்டி எழுப்பாதவரை எல்லோருக்கும் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கமுடியாது.

ஏனெனில் போரில் உயிர் நீத்தவர்கள் என்பது ஒரு பொதுவான வகை. அதற்குள் போராளிகள் வருவார்கள். படைத்தரப்பு வரும். பொதுமக்கள் வருவார்கள். சில சமயங்களில் வெளிநாட்டவர்களும் வருவார்கள். அதன்படி போருக்குப் பின்னரான ஒரு பொது நினைவுச்சின்னம் எனப்படுவது கொன்றவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் அவர்களைக் காணாமல் ஆக்கியவர்களையும் இனப்படுகொலை புரிந்தவர்களையும் இனப்படுகொலைக்கு ஆளாக்கியவர்களையும் ஒன்றாக நினைவுகூரும் சின்னமாகவே அமைய முடியும்.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் பட்சத்தில் அப்படி ஒரு நினைவுச் சின்னத்தைக் குறித்து தமிழ் மக்கள் சிந்திக்கலாம். ஆனால் நீதிக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகக் காணப்படும் ஒரு நாட்டில், யுத்த வெற்றி நினைவுச் சின்னங்களைக் கொண்டாடும் ஒரு நாட்டில், கொலை செய்தவரையும் கொல்லப்பட்டவரையும் ஒன்றாக ஒரு சின்னத்துக்குள் கொண்டு வருவது சாத்தியமே இல்லை. அதுமட்டுமல்ல பொத்தாம் பொதுவான ஒரு நினைவுச் சின்னம் எனப்படுவது இனப்படுகொலையால் உயிரிழந்தவர்களை போரில் உயிர் இழந்தவர்கள் என்ற ஒரு பொதுவான வகைக்குள் அடக்கிவிடும். இனப்படுகொலையால் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும்போது அங்கே இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக்கோரும் ஓர் அரசியல் இருக்கும். ஆனால் போரில் உயிர் நீத்தவர்கள் என்று வரும்பொழுது அங்கே இனப்படுகொலை என்ற சுட்டிப்பான அம்சம் போர் என்ற பொதுவான அம்சத்தில் பின்தள்ளப்பட்டுவிடும். இது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுடைய நீதிக்கான கோரிக்கையை மழுங்கடிக்கும் ஒரு நடவடிக்கை என்றே பார்க்கப்படும். ஏனென்றால் இனப்படுகொலைக்கு நீதி கிடைத்தால்தான் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் சாத்தியப்படும். நல்லிணக்கத்தை உருவாக்கினால்தான் ஒரு பொது நினைவுச் சின்னம் சாத்தியப்படும்.

எனவே முதலில் மூன்று இனங்களுக்கும் இடையிலே மெய்யான பொருளில் நல்லிணக்கத்தை ஸ்தாபிக்கும் விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். இது முதலாவது விடயம். இரண்டாவது விடயம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் என்ற அடிப்படையில் போராட வந்து அதில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொது நினைவுச்சின்னத்தை உருவாக்கக்கூடிய சூழல் இன்றுவரை உருவாகவில்லை என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். அப்படி ஒரு நினைவச்சின்னத்தை உருவாக்குவது என்றால் அதற்கு முதலில் தமிழ்மக்கள் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்குமான ஒரு பொது நினைவு நாளைக் கண்டுபிடிக்கவேண்டும். ஆனால் இப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியலில் ஒவ்வொரு இயக்கங்களுக்கும், கட்சிக்கும், தனிநபர்களுக்குமான நினைவு நாள்களும் நினைவுச்சின்னங்களுந்தான் உண்டு. ஒரு பொதுவான நினைவு நாளைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு தமிழ்த்தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் இனிமேல்தான் செழிப்படையவேண்டியிருக்கிறது. அதனால் ஒரு பொது நினைவுச்சின்னத்துக்கு இப்பொழுதும் வாய்ப்பில்லை.

அவ்வாறான ஒரு பொது நினைவுச்சின்னத்தை குறித்து நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் முன்வைக்கும் வாதம் என்னவென்றால், தியாகிக்கும், துரோகிக்கும் ஒரேயடியாக நினைவுச்சின்னத்தை அமைப்பதா என்பதுதான். அவர்களுக்கு பொது நிலனவுச்சின்னம் என்றாலே என்னவென்று தெரியவில்லை. உலகில் இதுவரை உருவாக்கப்பட்ட இதுபோன்ற பொது நினைவுச் சின்னங்களுக்கு முகம் கிடையாது. தனிப்பட்ட கட்சி அல்லது இயக்க அடையாளம் கிடையாது. அந்நினைவுச்சின்னம் அரூபமானது. அது தமிழ் மக்களுக்காக போராட வந்த எல்லோருக்குமானது. ஓர் இயக்கத்துக்கு உரியது அல்ல. ஒரு கட்சிக்கு உரியது அல்ல. அது பொதுவானது. ஒரு தேசத்துக்கானது. ஆனால் அப்படி ஒரு நினைவுச்சின்னத்தை தமிழ் மக்கள் இன்றுவரை கண்டுபிடிக்க முடியாதிருக்கிறார்கள்.


அப்படி ஒரு நினைவுச்சின்னத்தை குறித்து உரையாடும் பொழுது இங்கு தென்னாபிரிக்க உதாரணத்தைக் காட்டலாம். தென்னாபிரிக்காவில் "சுதந்திரப் பூங்காவில்" அவ்வாறான ஒரு சின்னம் உண்டு. அந்த நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட அந்தந்தப் பிராந்தியங்களின் மண்ணின் இயல்பைப் பிரதிபலிக்கும் பாறைகள் அங்கே ஓர் ஒழுங்கிற்குள் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பாறைகளுக்கு இடையிலான நிலப்பரப்பிலிருந்து புகை எழுந்தபடியிருக்கும். தென்னாபிரிக்கர்களைப் பொறுத்தவரை புகையானது இறந்தவர்களின் ஆத்மாக்களோடு தொடர்பு கொள்வதற்கான ஓர் ஊடகமாகக் கருதப்படுகிறது. தென்னாபிரிக்காவில் சுதந்திரப் பூங்கா என்று அழைக்கப்படும் நினைவு வளாகமானது இனப்படுகொலைக்கு எதிரான ஒரு நினைவு வளாகமாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வளாகம் அமைந்திருக்கும் நிலப்பரப்புக்கு நேர் எதிராக தென்னாபிரிக்கர்களை அடிமை கொண்ட டச்சு ஆக்கிரமிப்பாளர்களின் நினைவுச் சின்னம் காணப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்துவிட்டது. அதைவிட முக்கியமாக அங்கே நெல்சன் மண்டேலா என்ற ஒரு மகத்தான ஆளுமை இருந்தது. அது பண்புருமாற்றத்துக்குTransformation தலைமை தாங்கியது. நிலைமாறு கால நீதிச் செய்முறைகளுக்கு தலைமை தாங்கியது. எனினும் அங்கே போரில் ஈடுபட்ட வெவ்வேறு இனக்குழுக்களுக்கு இடையே ஆறாத காயங்கள் இப்பொழுதும் உண்டு. பகையும் வன்மமும் பழிவாங்கும் உணர்ச்சியும் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தென்னாபிரிக்காவில் ஒரு சுதந்திரப் பூங்காவை உருவாக்கியது போன்று இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் ஒரு நினைவு வளாகத்தை உருவாக்க முடியுமா ? நிச்சயமாக இல்லை. ஏனென்றால் இங்கே நிலைமாற்றம் அல்லது பண்புருமாற்றம் ஏற்படவில்லை. அது, மூன்று இனங்களுக்கிடையில் மட்டுமல்ல, தமிழினத்துக்குள்ளும் இனிமேல்தான் ஏற்படவேண்டியிருக்கிறது. இவ்வாறான ஓர் அரசியற் சூழலில் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை குறித்த உரையாடல்களுக்கு இலங்கைத்தீவும் தயாராக இல்லை; தமிழரசியலும் தயாராக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேட்டோ அணியில் இணையும் இந்தியா?

அ.நிக்ஸன்



## பௌத்த மயமாக்கலுக்கு எதிராகக் குரல் கொடுக்க விரும்பாத பின்னணி

இந்தோ - பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் ரஷ்ய - உக்ரைன் போர் ஆகிய விவகாரங்களில் அமெரிக்க - இந்திய அரசுகளிடையே நீடித்துக் கொண்டிருக்கும் பனிப்போரும் , இரு நாடுகளினதும் உறவுக்குரிய இணக்க முயற்சிகளும் புவிசார் அரசியல் - பொருளாதார விடயங்களில் எவருக்குமே பயனில்லாத ஒன்றாகவே தென்படுகின்றன.

குறிப்பாகத் தேசிய விடுதலை கோரி நிற்கும் பலஸ்தீனியர்கள், ஈழத்தமிழர்கள் ,குர்திஸ் இன மக்கள் என்போரின் அரசியல் உரிமைகளுக்கு விரோதமாகவே இந்தச் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

பிரதமர் மோடியை அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் மாறி மாறிப் புகழாரம் சூட்டுவதோடு, இந்தியப் பொருளாதார வளர்ச்சிகள் மற்றும் தத்தமது நாடுகளுக்கிடையிலான சர்வதேச வர்த்தகங்கள் பற்றிய நீண்ட உரையாடல்களையும் நடத்தி வருகின்றன. ரஷ்ய - உக்ரைன் போரினால் தற்போது உலகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள், பண வீக்கங்களைக் கட்டுப்படுத்த, முரண்பாடுகளில் உடன்பாடுகளை உருவாக்கித் தமக்குரியவாறு புவிசார் அரசியல் - பொருளாதார நலன்களைப் பெறும் உத்திகளை இந்த நாடுகள் கையாளுகின்றன.

குறிப்பாக பலஸ்தீனம், ஈழத்தமிழர்கள் , குர்திஸ்தான் மக்கள் ஆகியோரின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்களைக் கைவிட்டுத் தமக்குரிய உலக அரசியல் ஒழுங்குகளுக்குரிய ஏற்பாடுகளிலேயே இவை கவனம் செலுத்துகின்றன.

தமக்கு வசதியாக இணக்க அரசியலுக்குள் செல்லவேண்டும் என்ற கதைகளை இந்த வல்லாதிக்க நாடுகள் போதிக்கின்றன. இதன் காரணமாக இன ஒடுக்கல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேல் மற்றும் சிறிய நாடான இலங்கை போன்ற அரசுகளுக்குத் தமது ஒற்றையாட்சிக் கட்டமைப்பை உறுதிப்படுத்தும் வல்லமைகள் தற்போது கிடைத்திருக்கின்றன.

குறிப்பாக ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் பலஸ்தீனத்தில் மிக வேகமாக அதிகரித்து வரும் இஸ்ரேலின் குடியேற்றங்கள், இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த மயமாக்கல் போன்ற இன ஒடுக்கல் செயற்பாடுகள் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டது போன்ற உணர்வுகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கூடவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் சூடு பிடிக்குமென எதிர்பார்க்கப்பட்டாலும், தத்தமது புவிசார் அரசியல் பொருளாதார நலன்களுக்கு ஏற்ப இலங்கை போன்ற சிறிய நாடுகளையும் இஸ்ரேல் போன்ற சக்தி மிக்க நாடுகளையும் தமக்குச் சாதகமாக மாற்றும் நகர்வுகளில் வல்லாதிக்க நாடுகள் ஈடுபடுகின்றன.

குறிப்பாக அமெரிக்கா அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான் , இந்தியா போன்ற வல்லாதிக்க நாடுகள், ஈழத்தமிழினம், பலஸ்தீனம் போன்ற தேசிய விடுதலை வேண்டி நிற்கும் சமூகங்களின் அரசியல் நலன்களைத் தமக்குரியவாறு மாற்ற முனைகின்றன. பௌத்த மயமாக்கல் குறித்து இலங்கைக்குக் கண்டனம் தெரிவிக்காத பின்னணிக்கும் இந்த நாடுகளின் அரசியல் பொருளாதார நலன்களே காரணம்.

இந்தியாவைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசியல் தீர்வாக முன்வைக்கவேண்டுமென இலங்கைக்குக் கடும் அழுத்தம் கொடுத்து வருகின்றது. ஆனால் அமெரிக்கா முற்றுமுழுதாக இலங்கையின் ஒற்றையாட்சி நலன்களுக்கு ஏதுவாகவே செயற்படுகின்றது. பிரித்தானிய, கனேடிய அரசுகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

இந்தியாவுடன் இருக்கக்கூடிய அரசியல், பொருளாதார பனிப்போர் காரணமாக பாகிஸ்தானுடன் அமெரிக்கா அதிகளவு இராணுவ உறவுகளைப் பேணும் அதேநேரம், இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கில் இந்தியாவுடன் இணைந்து சீனாவுக்கு எதிரான இராணுவ வியூகங்களையும் வகுக்கின்றது.

இந்த வியூகங்களை ஜனாதிபதி ரணிலும் , தமிழர்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கைகளை நீக்கம் செய்யும் நோக்கில் இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குச் சாதகமாக்கியுள்ளார். உலகளவில் பத்து ஆண்டுகளில் இந்தியா முக்கியமான இடத்தை பிடித்திருப்பதாகவும், 2014 ஆம் ஆண்டு நரேந்திரமோடி பிரதமராகப் பதவியேற்றபின்னர் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டதால், குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதாகவும் அமெரிக்காவின் மோர்கன் ஸ்டான்லி நிறுவனத்தின் ஆய்வறிக்கை கூறுகின்றது.

அமெரிக்க - இந்தியப் பனிப்போருக்கு மத்தியில் ஏதோவொரு வகையில் புகழாரம் சூட்டி வரும் அமெரிக்கா, கடந்த வாரம் தனது மோர்கன் ஸ்டாலின் நிறுவனத்தின் மூலம் மோடியைப் புகழ்ந்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவின் பிரபல வர்த்தக நிறுவனமான அதானி குழுமத்தின் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்களை அமெரிக்காவின் கணக்கியல் ஆய்வு நிறுவனம் ஒன்று முன்வைத்திருந்தது.

இந்த நிலையில் கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பதாகப் புகழாரம் சூட்டியிருப்பதானது, இந்தோ - பசுபிக் மற்றும் ரஷ்ய - உக்ரைன் போர் விவகாரங்களில் இந்தியா தமக்குச் சாதகமாகச் செயற்பட வேண்டுமென அமெரிக்கா எதிர்பார்ப்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இருபதாவது ஆண்டு ஷங்ரி - லா உரையாடல் சிங்கப்பூரில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வரும் பின்னணியில் ஆசியப் பிராந்தியப் பாதுகாப்புகள் குறித்துப் பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அமெரிக்காவுக்கு அவசியமாகிறது.

ஆகவே இதனை மையமாகக் கொண்டே அவுஸ்திரேலியாவும் கடந்த வாரம் மோடியைப் புகழ்ந்துள்ளதுடன் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் இந்தியா ஒன்றித்துச் செயற்படும் என்ற நம்பிக்கையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே தற்போதைய சிக்கலான புவிசார் மூலோபாயச் சூழலை எதிர்கொள்ளும் பின்னணியும் தென் பசுபிக் காலநிலை மாற்றத்தின் விளைவுகளும் இந்தியாவை நட்பு சக்தியாக மாற்றும் நிலைமைக்குள் மேற்குலக நாடுகளைத் தூண்டியிருக்கிறது போலும்.

அமெரிக்கா, கனடா, உக்ரைன், சீனா, சிங்கப்பூர் மற்றும் பிரித்தானியா உட்படப் பல நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட இராஜதந்திரிகள் எனப் பலரும் பங்குகொண்டிருக்கும் ஷங்ரி - லா உரையாடல் மாநாட்டில் தற்போதைய உலகப் பாதுகாப்பு மற்றும் உலக அரசியல் ஒழுங்குகள் பற்றித் தனித்தனியாகவும் சந்திப்புகள் நடந்துள்ளன.

அணு ஆயுதங்கள் சரிபார்க்கப்பட்டு மீளமுடியாமல் அகற்றப்பட வேண்டும் என்ற நீண்டகாலப் பார்வையை மீண்டும் வலியுறுத்தவும் பிராந்தியப் பாதுகாப்புக்கான அணுப் பரிமாணங்கள் பற்றிய குழு விவாதங்களிலும் வல்லாதிக்க நாடுகளின் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் பங்கெடுத்துள்ளனர். ஆனால் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. நியூசிலாந்து நீண்டகால அணுசக்தி இல்லாத கொள்கையைக் கொண்டுள்ளது. அணு ஆயுதங்கள் இல்லாத உலகத்துக்காகத் தொடர்ந்து வலுவான சட்டத்தரணிகளாகச் செயற்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சர் ஆண்ட்ரூ லிட்டில் கூறியதாக சிங்கப்பூர் அரச செய்தி நிறுவனமான mindef.gov.sg கூறியுள்ளது. சிங்கப்பூரில் உள்ள சர்வதேச மூலோபாய ஆய்வுகள் நிறுவனமே (International Institute for Strategic Studies - IISS) ஷங்ரி - லா உரையாடலை நடத்துகின்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை நிறைவடையும் இந்த மாநாட்டில் ரஷ்ய - உக்ரைன் போர் விவகாரத்துக்கு முடிவு காணும் தீர்மானங்கள் அல்லது அமைதிக்கான உடன்பாடுகள் ஏற்படுமென அந்தச் செய்தி நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. ஆகவே ஷங்ரி-லா உரையாடலுக்கு முன்னதாக இந்தியாவைக் கவர்ந்திழுக்கும் முயற்சிகளை அமெரிக்கா முடுக்கிவிட்டுள்ளமை தற்போது பகிரங்கமாக வெளிப்பட்டுள்ளது. அமெரிக்காவை மையப்படுத்திய நேட்டோ இராணுவ அணியில் சேர வேண்டுமா என்பதை இந்தியா தீர்மானிக்க வேண்டும் என்று புதுடில்லியில் உள்ள இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் எரிக் கார்செட்டி, வியோன் (WION) என்ற செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருக்கிறார். இந்தோ-பசிபிக் பாதுகாப்பு கட்டமைப்புக்குச் சாதகமான பொதுக் கருத்துச் சூழலை வடிவமைப்பதில் அமெரிக்க - இந்திய உறவு தங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆனால் நேட்டோவை நோக்கிச் சாய்வதை இந்தியா விவேகமற்ற முறையில் தேர்வு செய்தால், அது புதுடில்லியின் மூலோபாய சுயாட்சி, சர்வதேச அந்தஸ்து மற்றும் அயல் நாடுகளுடனான உறவுகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சீனாவின் 'குளோபல் ரைம்ஸ்' செய்தி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தாய்வான் பிரச்சினையில் சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுக்க இந்தியாவை நேட்டோ இராணுவ அணியில் சேர்க்க ,ஒரு கொள்கை முன்மொழிவை அமெரிக்க ஹவுஸ் கமிட்டி சென்ற மே மாதம் 27 ஆம் திகதி ஏற்றுக்கொண்டதாக சிங்குவா பல்கலைக்கழகத்தின் தேசிய வியூகக் கழகத்தின் ஆராய்ச்சித் துறையின் இயக்குநர் கியான் ஃபெங், கூறியதாக குளோபல் டைம்ஸ் கடந்த வியாழக்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது.

ஆகவே சீனாவை எதிர்கொள்ளும் நோக்கில் நேட்டோக் கட்டமைப்பின் மூலம் ரஷ்யாவை எதிர்கொள்ளக்கூடிய முன் மாதிரி ஒன்றை ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா பரீட்சித்துப் பார்க்க விரும்புவதையே இது வெளிக்காட்டுகிறது. இந்தோ - பசிபிக் மூலோபாயம் வெற்றிபெறுமா என்பதைத் தீர்மானிக்கும் முக்கியமான இணைப்பாக அமெரிக்கா, இந்தியாவைக் கருதுகிறது என்றும் கூறலாம். அதேநேரம் நேட்டோ இராணுவக் கட்டமைப்பின் மூலம் தனது செல்வாக்கை அதிகரிக்க இந்தியாவும் விரும்புகிறது. ஓரளவுக்கு சீனாவுட னான அதன் மூலோபாயச் செல்வாக்கை அதிகரிக்கவும் இந்தியா முற்படுகின்றது.

ஆனால் ரஷ்யாவுடன் மரபு வழி உறவைப் பேணிக் கொண்டு அதுவும் உக்ரைன் போரில் ரஷ்யாவைக் கண்டிக்காத ஒரு பின்னணியிலும் எந்த அடிப்படையில் நேட்டோ அணியில் இணைய இந்தியா விரும்புகின்றது ? என்பது புதிராகவே உள்ளது. அல்லது அவ்வாறு விரும்புவது போன்று காண்பித்துக் கொண்டு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் பகைத்துக் கொள்ளாமல், ரஷ்யாவுடன் உறவைப் பேணி அதன் ஊடே சீனாவுடனான வட இந்திய எல்லைப் பிரச்சினைகளுக்கும் சுமுகமான ஒரு தீர்வை உருவாக்க இந்தியா முற்படலாம்.

ஆனாலும் சர்வதேச உறவு முறையில் இரட்டைத் தன்மை கொண்ட வெளியுறவுக் கொள்கை நீண்டகாலம் நீடிப்பதற்குரிய வாய்ப்புகள் இல்லை. அதுவும் சர்வதேச வர்த்தகத்தில் இந்திய ரூபாவை ரஷ்யாவுடன் சேர்ந்து ஈடுபடுத்தும் ஏற்பாடுகளில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், இந்தியாவின் இரட்டைத்தனமான சர்வதேசக் கொள்கை எந்தளவு தூரம் வெற்றியளிக்கும் என்று கூற முடியாது. ஆனாலும் ஜூன் 22 ஆம் திகதி மோடியை அதிகாரபூர்வமாக அமெரிக்கா அழைப்பதற்கு முன்னதாகவே இந்தியாவைக் கவரும் அமெரிக்காவின் இந்த முயற்சிகள் அரங்கேறி வருகின்றன.

எதிர்வரும் ஐந்தாம் திகதி, அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்டின் தனது ஏழாவது இந்தோ - பசிபிக் சுற்றுப் பயணத்தின் போது, புதுடில்லியில் அமெரிக்க - இந்தியக் கூட்டுப் பாதுகாப்புப் பற்றி உரையாடவுள்ளதாக 'இந்துஸ்தான் ரைம்ஸ்' கூறுகின்றது. இந்தப் பின்புலத்தில் நேட்டோவுடன் இந்தியாவின் நெருக்கமான ஒத்துழைப்பை நிராகரிக்கவே முடியாத சூழல் உண்டு. ஏனெனில் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்தபோதும் அவ்வாறான நெருக்கத்துடன் மோடி உறவைப் பேணியிருந்தார். இருந்தாலும் இப்போதைக்கு எல்லைப் பிரச்சினைகளினால் சீனா - இந்திய உறவுகள் குறைவாக இருந்தாலும் கூட, அமெரிக்கச் செயற்பாடுகளினால் சீனாவுடன் நேரடி மோதல் ஒன்றுக்குத் தள்ளப்படுவதில் இந்தியா எச்சரிக்கையாக உள்ளது என்பதையும் அவதானிக்கமுடியும்.

அதாவது அமெரிக்க - ரஷ்ய உறவு மோசமடைந்து,ரஷ்ய- உக்ரைன் மோதலின் தொடர்ச்சியின்போது, இந்தியா ரஷ்யாவுடனான தனது நீண்டகால ஒத்துழைப்பைக் கருத்திற் கொண்டு அமெரிக்காவுடன் ஒரு குறிப்பிட்ட தூரத்தைக் கடைப்பிடிக்கும் வாய்ப்புகளே கூடுதலாக உண்டு எனலாம். ஆகவே இவ்வாறான புவிசார் அரசியல் போட்டிகளை நன்கு அவதானித்துச் செயற்படும் இலங்கை இராஜதந்திரிகள், மிக நுட்பமாக இலங்கை ஒற்றையாட்சியைப் பலப்படுத்தச் சர்வதேச முதலீட்டாளர்களையும் சர்வதேச ஒத்துழைப்புகளையும் பெற்று வருகின்றனர்.

இஸ்ரேல் அரசு வல்லாதிக்க சக்தியாக இருப்பதால் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் அந்த அரசின் ஒத்துழைப்பை பெறவிரும்புவர் என்பது கண்கூடு.

ஆனால் இலங்கை சிறிய நாடாக இருந்தாலும், இந்தோ - பசுபிக் விவகாரத்தில் இந்தியாவுக்குப் பக்கபலமாகக் கொழும்பு செயற்பட வேண்டும் என்பதற்குரிய கோணங்களில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் சிந்திக்கின்றன.

இது இலங்கைக்கு வாய்ப்பாகவே உள்ளது. குறிப்பாக ஈழத் தமிழர்களுக்குரிய குறைந்த பட்ச சர்வதேச ஆதரவைக்கூட, ரணில் தனது வியூகங்கள் மூலம் இலங்கையின் உள்ளக விவகாரமாகத் திசை திருப்பி வருகிறார். ஆகவே 'அரசுக்கு அரசு' என்ற இந்தச் செயற்பாடுகளினால் தேசிய விடுதலை கோரி நிற்கும் சமூகங்கள், இன ஒடுக்கலுக்கு உள்ளாவதைப் புவிசார் அரசியல் - பொருளாதாரப் போட்டிகள் மூடி மறைத்து விடுகின்றன என்ற முடிவுக்கு இலகுவாக வந்துவிடலாம்.

தேவை ஏற்பட்டால் மாத்திரமே இன ஒடுக்கல் செயற்பாடுகளை வல்லாதிக்க நாடுகள் மீளவும் தோண்டி எடுக்கும்.

அவ்வாறு தோண்டி எடுக்கப்படும்போது பலஸ்தீனத்துக்குச் சில சமயங்களில் அது வாய்ப்பாக அமைந்தாலும், ஈழத்தமிழர்களுக்கு வாய்ப்பாக வரக்கூடிய சந்தர்ப்பங்களை இந்தியப் புவிசார் அரசியல், பொருளாதார நலன்கள் தடுத்துவிடுகின்றன. எனவே இதற்கு ஏற்ற முறையில் அதாவது சமகாலப் புவிசார் அரசியல் பொருளாதாரப் போட்டிச் சூழலில் சிங்களத் தரப்பு எப்படி வியூகங்களை வகுக்கின்றதோ அதற்கும் மேலாகச் சென்று தமிழ்த்தரப்பு தனக்குரிய அணுகுமுறைகளில் புதிய படிப்பினைகளைத் தேட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் பொய் உங்கள் நெஞ்சும் பொய்

குருமன்காட்டாள்
வன்னிகா



யாழ்.சிறையிலுள்ள கைதிகளில் 300க்கு மேற்பட்டோர் போதைப்பொருளோடு தொடர்புடையவர்கள்.

### போதைப்பொருள் விலைகள்

**ஹெரோய்ன் ஒரு மில்லிகிராம்**
50000 – 60000 ரூபா வரை

**ஐஸ்போதைப்பொருள்**
25000 – 30000 ரூபா வரை

**கேரளக்கஞ்சா (ஒருமுறை நுகரும் அளவு)**
750 – 3000 ரூபா வரை




வடமாகாணத்தில் போதைவஸ்துப் பாவனை 2019 இலிருந்து மிக மோசமாக அதிகரித்துவருகின்றது. 2019 டிசெம்பரிலிருந்து 2023 மே மாதம்வரை வடமாகாணத்தின் ஆளுநர்களாக பி.எஸ்.எம். சாள்ஸ், ஜீவன் தியாகராஜா ஆகியோர் இருந்தனர்.

மீண்டும் கடந்த மாதம் தொடக்கம் பி.எஸ்.எம். சாள்ஸ் ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் வடமாகாணத்தின் சட்டம், ஒழுங்கு நிலையின் சீர்குலைவுக்கு அடிப்படைக் காரணமான போதைவஸ்துப் பாவனையைக் கட்டுப்படுத்தி ஒழிக்க முயன்றிருந்தால், இன்றைய 'கட்டுமீறிய' நிலை வந்திருக்காது. 2013 ஒக்ரோபர் தொடக்கம் 2018 ஒக்ரோபர் வரை ஐந்து வருடங்கள் வடமாகாணசபையின் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர் குழாமும் சபை உறுப்பினர்களும் மாகாணசபையாக இயங்கிய காலத்திலும் அதன் பின்னர் இப்பொழுதும் பேரவைத் தலைவர் பதவியை வகிப்பவர் சீ.வி.கே. சிவஞானம். இவரும் வடக்கின் போதைவஸ்துக் கட்டுப்பாடு, போதைஒழிப்பு முதலிய விடயங்களில் யாதொரு பங்களிப்பையும் இன்றுவரை வழங்கவில்லை. இந்தியா,ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தையடுத்து வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்டது. வடக்கு மாகாணம் முழுவதிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) இரண்டு நியமன உறுப்பினர் இடங்கள் உள்ளடங்கலாக 30 இடங்களைக் கைப்பற்றி, ஆட்சியைத் தனதாக்கியது. மாகாணசபையின் முதலாவது கன்னி அமர்வு 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.

அன்றிலிருந்து 2018 ஒக்ரோபரில் வடக்கு மாகாணசபையின் ஆயுள் நிறைவடையும் வரை, 130 க்கும் மேற்பட்ட அமர்வுகள் இடம்பெற்றுள்ளன. பல நியதிச் சட்டங்கள், 400 க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த அமர்வுகள் எதிலும் வடக்கின் போதைவஸ்துக் கட்டுப்பாடு, போதைஒழிப்பு முதலிய விடயங்கள் தொடர்பாக யாதொரு பேச்சும் இடம்பெற்றதில்லை. வடக்கின் மாணவர்களை, தொழிலாளர்களை, மக்களை, குடும்பங்களை, அவர்களின் வாழ்வை, இருப்பை அழித்தொழிக்கத்தொடங்கியிருந்த போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்துவது, ஒழிப்பது தொடர்பில் நியதிச் சட்டங்களிலோ சபைத் தீர்மானங்களிலோ ஏதும் உள்வாங்கப்பட்டு செயற்படுத்தப்படவில்லை. வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டபோது நியமிக்கப்பட்ட 4 அமைச்சர்களும் 2017ஆம் ஆண்டு நீக்கப்பட்டு, புதியவர்கள் 4 பேர் நியமிக்கப்பட்டனர்.

5 வருடங்கள் சபை இயங்கிய காலத்தில் முதலமைச்சருடன் முதலில் நால்வர், பின்னர் நால்வர் என எண்மர் மாகாண அமைச்சர்களாக பதவி வகித்தனர்.போதைக் கட்டுப்பாடு குறித்தோ, போதை ஒழிப்புக் குறித்தோ, போதையால் உள நிலை, உடல் நிலை பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வு குறித்தோ செயலூக்கமும் பயனுறுதியும் மிக்க எந்த நடவடிக்கையும் இந்த ஒன்பது பேராலுமோ அல்லது சபை உறுப்பினர்களாலுமோ மேற்கொள்ளப்படவேயில்லை.

வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டபோது உறுப்பினர்களாக இருந்த தர்மலிங்கம் சித்தார்த்தன்,அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தற்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் மாகாணசபை உறுப்பினர்களாக இருந்தபோதும் சரி, இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக அதிகார உச்சம் பெற்ற நிலையிலும் சரி , போதையைக் கட்டுப்படுத்த எதுவும் செய்யவேயில்லை.

போதையுடன் தொடர்பான கொலைகள், காயப்படுத்தல்கள்,கடத்தல்கள், பாலியல் வன்முறைகள், கொள்ளை மற்றும் போதையுடன் தொடர்பான வீதி விபத்துக்கள் முதலிய குற்றங்கள் வடக்கில் வேகமாகவும் தீவிரமாகவும் அதிகரிக்கின்றன.

பாடசாலை மாணவர்கள் போதைக்குப் பலியாக்கப்பட்டுள்ளனர். அரசியல் கட்சி ஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், சமய வைபவங்கள், வழிபாட்டிடங்கள், மங்கல, அமங்கல நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள்,பொலிஸ், படைபட்டாளங்கள் என எங்கும், எதிலும் போதைப்பொருள் மாபியாக்கள் ஊடுருவியுள்ளனர்.

மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அவர்களுடன் பணியாற்றும் துறைக்குரிய அலுவலர்கள்,கல்வி அதிகாரிகள், சுகாதாரத் துறையினர்,சமூக செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பொலிஸார் எனச் சகலரும் போதைப்பொருளை ஒழிக்க வேண்டும் எனும் உறுதியான தீர்மானம், திடம் ஆகியவற்றுடன் முன்னரங்குக்கு வரவேண்டுமல்லவா?

ஆனால் எல்லோருமே " மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலேலோ...." எனும் பாணியில் தாலாட்டுப் பாடி,வேறு ஏதேதோ கதைத்துக் காலம் ஓட்டுவதாகவேபடுகின்றது.வடக்கில் நிலைகொண்டுள்ள ஆன்மீகத்தலைவர்கள்கூட, இப்பேரழிவு நிலைமையையிட்டு அதிகம் கதைப்பதுமில்லை.... செயற்படுவதுமில்லை. கஞ்சிக்குப் பயறு போட்டாற் போல ஒரு சில ஆன்மீகக் குருமார் மட்டும் இவ்விடயத்தில் அக்கறையுடன் செயற்படுகின்றனர்.

கிராமங்கள், நகரங்கள், குடிசைகள், மாளிகைகள், பெருவீதிகள், சந்திகள்,சதுக்கங்கள் ஒழுங்கைகள், ஓடைகள் எல்லாவிடமும் போதைப் பொருள்கள் சீரழிவுகளையும் ஒழுங்கீனங்களையும் அடாவடிகளையும் அட்டூழியங்களையும் தலைவிரித்தாட வைத்துள்ளன.

இளம் தலைமுறையினரில் பலர் போதையால் உடல் உள நிலை பாதிக்கப்பட்டு அன்றாடம் இரவு பகலாக வீதிகளில் பராமரிப்பும் சிகிச்சையுமின்றி அலைகின்றனர்.இவ்வாறாகப் போதைப்பொருள்களால் ஏற்படும் சமூகப் பிறழ்வு நிலை, தமிழ் மக்களின் சமூகஅரசியல் பொருளாதார ஸ்திரப்பாடுகளை அழித்தொழிக்கும். இழிவும் அழிவும் நோயும் பிணியும் மிக்கவர்களாகி, அரசியல் பொருளாதார உரிமைகள் பற்றிய விழிப்பற்ற அடிமைகளாக கூனிக்குறுக வைக்கும். அடங்கியொடுங்கி இல்லாதொழியும் நிலைக்கிட்டுச் செல்லும். ஆங்காங்கு நடைபெறும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களினது, மாவட்ட ஒருங்கிணைப்புக்கூட்டங்களினது நிகழ்ச்சி நிரல்களில் போதைப்பொருள் பிரச்சினைகள் சேர்க்கப்பட்டாலும் நடைமுறையில்


" வந்தனர்,வடை கடித்துத் தேநீர் குடித்தனர், போயினர்..." எனும் நிலைதான். அந்த நிலை மாற்றப்படவேண்டும்.

.போதை வியாபாரிகளின் கடல் வழி மற்றும் தரைவழி பாதைகள் முற்றாகக் கண்காணிக்கப்படுவது மிக அவசியம். வடக்கின் கடல் வழி மற்றும் தரைவழிப் பாதைகள் முற்றாகக் கட்டுப்படுத்தப்படுவது இலங்கை மக்கள் அனைவருக்கும் போதையிலிருந்து விடுதலை கொடுக்கும்.

## சித்திரத் தொடர்கதை



ஓவியம் : ஆர். இராகவன்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







○ இயல்வாணன்

கவியரங்குக்கோர் கந்தவனம் என இரசிகமணி கனகசெந்திநாதனால் சிறப்பிக்கப்படுமளவுக்கு ஒரு காலத்தில் சந்தவெழில் தவழும் கவிதைகளால் அரங்கை அதிர வைத்தவர் கவிஞர் வி.கந்தவனம். கவிஞராக, பாடநூல் எழுத்தாளராக, நடிகராக, பல்துறை அறிஞராக, பேச்சாளராக, சமயச் சொற்பொழிவாளராக, கல்வியியலாளராக, சிறுவர் இலக்கியகர்த்தாவாக பல நிலைகளில் கலை இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் பெருந் தொண்டாற்றியவராக அவர் விளங்குகின்றார்.

28.10.1933 அன்று நுணாவில் மேற்கு, சாவகச்சேரியில் பிறந்த விநாயகர் கந்தவனம் தனது ஆரம்பக் கல்வியை நுணாவில் மேற்கு கணேச வித்தியாசாலையிலும் (இன்று நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை மூடப்பட்டுள்ளது) இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் நிறைவு செய்தார். சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் (எஸ்.எஸ்.சி) சித்தியடைந்த அவர் ஓராண்டு டிறிபேர்க் கல்லூரியில் எழுதுவினைஞராகக் கடமை புரிந்தார். இந்தக்காலத்தில் வடமாநில ஓவியப் பரிசோதகர் கனகசபையிடம் ஓவியமும், சங்கீத பூஷணம் நடேசனிடம் சங்கீதமும் பயின்றார். பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும், கோவை அரசினர் கலைக்கல்லூரியிலும் தனது மேற்கல்வியைத் தொடர்ந்தார். சென்னை பல்கலைக்கழகத்தில் இளங் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1958ஆம் ஆண்டு ஆசிரியர் பணியில் இணைந்து கொண்ட அவர் 6 ஆண்டுகள் மாத்தளை சென்.தோமஸ் கல்லூரியில் கற்பித்து. இடமாற்றம் பெற்று வந்து வயாவிளான் மத்திய கல்லூரியில் கற்பித்தார். குரும்பசிட்டி அவர் திருமண பந்தத்தால் புகுந்த இடமாயிற்று.


கவிஞர் வி.கந்தவனம்

கல்வி அமைச்சின் பாடநூற் சபையில் பணியாற்றியதுடன் அரச புவியியல் பாட நூல் எழுத்தாளர் குழுவில் ஒருவராகக் கடமையாற்றினார். புவியியல் பாடத் துணைநூல்களையும் (1970) எழுதினார்.1973ஆம் ஆண்டு அதிபர் நியமனம் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் பணியாற்றினார். ஆசிரிய ஆலோசகராகவும் கடமை புரிந்தார். பின்னர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் சிறிதுகாலம் அதிபராகக் கடமையாற்றினார். கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார்.

இந்தக் காலங்களில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமையைப் பெற்றார். இலங்கையில் க.பொ.த. உயர்தரத்தில் 'நாடகமும் அரங்கியலும்' ஒரு பாடமாக ஆரம்பிக்கப்பட்டபோது தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகத்தில் நாடக டிப்ளோமா பயிற்சி வழங்கப்பட்டது. அதில் இவர் பங்குபற்றிச் சிறப்புச் சித்தியடைந்ததுடன் வடபுலத்தில் முதன்முதலில் (வயாவிளான் மத்தியகல்லூரியில்) நாடக பாடத்தைக் கற்பித்த ஆசிரியராகவும் விளங்கினார். அத்துடன் நாடகபாட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் வளவாளராகவும் விளங்கினார். உயர் ஆங்கில டிப்ளோமா படிப்பையும் நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறு எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்தகன்று கற்ற அறிவும், அனுபவமும் அவரை ஒரு அறிஞனாகவே ஆக்கின.

1980ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு கற்பித்தல் பணிக்காகப் பயணமான அவர் அந்நாட்டின் டிரான்ஸ்கி பிராந்தியத்தில் (நெல்சன் மண்டேலா பிறந்த இடம்) புனித கத்பேட்ஸ் உயர் பாடசாலையில் மானிடவியல்துறைத் தலைவராகக் கடமையாற்றினார்.

1988ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்ற அவர் இன்றுவரை அங்கு வாழ்ந்து வருகிறார். 1948 ஆம் ஆண்டு தனது 15 ஆவது வயதில் ஈழகேசரியின் சிறுவர் பகுதியில் 'ஒரு கால் மூன்று தலை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையுடன் இவர் இலக்கிய உலகுக்குள் நுழைந்தார்.

1952இல் ஈழகேசரி பொதுநலவாயப் பொருட்காட்சி தொடர்பில் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. 1954 ஆம் ஆண்டு இவரது முதலாவது நூலான 'ஒன்றரை ரூபாய்' குறுநாவல் வெளிவந்தது. இதனைக் கவிநாயகன் என்ற புனைபெயரில் எழுதினார். பல்வேறு துறைசார்ந்து 50 க்கும் மேற்பட்ட நூல்களை அவர் எழுதியுள்ளார். வித்தியானந்தமாலை, அரும்பு.பூச்சரம், தேவைக்கேற்ற திருமுறைத் திரட்டு உள்ளிட்ட பல நூல்களைத் தொகுத்துள்ளார்.

'கீரிமலையினிலே' - குறுங்காவியம் (1969), பாடுமனமே - கவிதைகள் (1972), இலக்கிய உலகம் - க்விதைகள்(1964), ஏனிந்தப் பெருமூச்சு - கவிதைகள்(1965), கூனியின் சாதனை - கட்டுரை (1966), நுணாவிலூர் - இடவரலாறு(1971), உய்யும் வழி- அரங்கக் கவிதைகள்(1972), கவியரங்கில் கந்தவனம்(1972), நல்லூர் நாற்பது(1971), முறிகண்டிப் பத்து, குரும்பசிட்டி விநாயகர் பத்து, பரீட்சையில் சித்தியடைவதெப்படி?(1972), இலங்கையில் ஆசிரியத் தொழில் (1977), விநாயகப்பா பக்திப் பனுவல்(1993), ஒன்றுபட்டால் நாட்டிய நாடகம்(1994), மணிக்கவிகள்(1994), இயற்கைத்தமிழ் (1995), எழுத்தாளர்(2005), முத்தான தொண்டர்(1995), புதிய சைவ வினாவிடை(1997), தங்கம்மா நான்மணிமாலை(1997), பத்துப் பாட்டு(1998), ஆறுமுகம்(1998), 12 Short stories (1998), Lasting Lights(1998), சிவபுராண தத்துவம்(1998), கனடாவில் சைவசமயம்(2000), அது வேறுவிதமான காதல்(2001), சிவவழிபாடு (2002), கந்தன் கதை(2002), ஓ கனடா(2002), வரிக்கவிகள்(2002), தமிழ்க் கவிதை மரபு (2005), பொங்குதமிழ் (2005), ஆன்மீகக் கவிதைகள் (2007), பாவாரம் (2007), கவிநாயகம் வாழ்வும் வரலாறும் வானொலித் தொடர் நேர்காணல்(2009) முதலான இவரது நூல்கள் குறிப்பிடத்தக்கன.

ஆலயங்கள் பலவற்றுக்கும் குறிப்பாக கொல்லங்கிராய் விநாயகருக்கு - பல சிறு நூல்களை எழுதியுள்ளதுடன் சிறுவருக்கான சமயக் கதைநூல்களையும்(கந்தனும் ஔவையாரும், விநாயகப் பெருமானும் அகத்தியரும்) எழுதியுள்ளார். இவ்வாறு தமிழன்னைக்கு மகுடம் சூடும் பல படைப்புகள் மூலம் தனது பல்துறை ஆளுமையை கவிஞர் கந்தவனம் வெளிக்காட்டியுள்ளார்.

யாழ்.இலக்கிய வட்டத்தை உருவாக்குவதில் முக்கியமான பங்காற்றிய கவிஞர் கந்தவனம் எட்டு ஆண்டுகள் அதன் தலைவராகவும் கடமையாற்றினார். தான் வாழ்ந்த, பணியாற்றிய இடங்களில் இலக்கிய மன்றங்களை உருவாக்கியுள்ளார். கவிமணி, மதுரகவி, இலக்கிய வித்தகர், சைவதுரந்தரர் முதலான 20 க்கும் மேற்பட்ட பட்டங்கள் வழங்கி தமிழுலகம் இவரைக் கௌரவித்துள்ளது.

தனது ஆழ்ந்தகன்ற அறிவால் தமிழிலக்கியத்துக்கு வளஞ்சேர்த்த கவிஞர் வி.கந்தவனம் 90 அகவையில் கனடாவில் வசித்து வருகிறார். அவர் நூறாண்டு நிறைவு கண்டு தமிழுக்கு அணி செய்ய வாழ்த்துவோம்.

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

**1936 மார்ச் 17**

சேர். வைத்திலிங்கம் துரைசாமி சட்டசபை சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். சேர்.வைத்திலிங்கம் துரைசாமிக்கு 30 வாக்குகளும் அவரை எதிர்த்துப்போட்டியிட்ட பிரான்சிஸ் டீ சொய்சாவுக்கு 28 வாக்குகளும் கிடைத்தன.

**1936 மார்ச் 22**

மலாயா சிறாம்பான் மருத்துவமனை பிரதி மருத்துவ அதிகாரி A.S.முத்து , கார் விபத்தில் பலியானார். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இவரது இறுதி ஊர்வலத்தில் 3000 பேர் கலந்து கொண்டதாக ஈழகேசரி செய்தி வெளியிட்டுள்ளது. மரண ஊர்வலம் ஒரு மைல் நீளத்திற்கு காணப்பட்டதாகவும் , மரண ஊர்வலம் காரணமாக போக்குவரத்துத் தடைப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது இறுதிக்கிரியைகள் நடைபெற்றபோது மலாயாவில் வாழ்ந்த ஐரோப்பியர்களும் அன்னாருக்கு வாய்க்கரிசி போட்டனர்.அத்துடன் மலாயாவில் வாழ்ந்த சீன, ஜப்பானிய பிரஜைகளும் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

**1936 மே**

◆ சென்னைப் பல்கலைக்கழகம் தயாரித்த தமிழ்ப்பேரகராதி தொகுப்பு பணியில் கடமை புரிந்த குரும்பசிட்டி முத்துக்குமாருவுக்கு சென்னைப் பல்கலைக்கழகம் நன்றி தெரிவித்தது.

◆ சட்டசபையில் யாழ்ப்பாணத்துக்கு மாநகரசபை தேவையெனத் தீர்மா னிக்கப்பட்டது. எனினும் யாழ்ப்பாணத்துக்கு மாநகரசபை தேவையில்லையென வட இலங்கை தேசிய சங்கம் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு கடிதம் அனுப்பியது.

**1936 மே 30**

◆ வட இலங்கை சங்கீத மகாநாடு சென்.ஜோன்ஸ்,கல்லூரியில் நடைபெற்றது. கல்வியமைச்சர் கன்னங்கரா,அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர் சோமசுந்தரபாரதியார்,சட்டசபை உறுப்பினர் நடேசபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

**1936 மே 09**

◆ யாழ். நகரசபை திறப்பு விழா ஆளுநர் ரெஜினோல்ட் எட்வேர்ட் அவர்களால் மாலை 5.00 மணிக்கு யாழ். நகரசபைக்கான கட்டம் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் உரையாற்றிய ஆளுநர் கட்டட வரைபடத்தை தயாரித்த கட்டடக்கலை வல்லுநரைப் பாராட்டினார். நகரசபைத் தலைவர் R.R.நல்லையா, சபாநாயகர் சேர்.வைத்திலிங்கம் துரைசாமி ஆகியோரும் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

◆ அப்போதைய அமைச்சரவை தனிச்சிங்கள அமைச்சரவையாகவே காணப்பட்டது. எனவே, அமைச்சரவையில் தமிழர்களுக்கு 25 வீதமும் ஏனையோருக்கு 25 வீதமும் ஒதுக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணச்சங்கம், குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பான பிரிட்டன் அமைச்சருக்கு மனு அனுப்பியது.

**1937 பெப்ரவரி**

றீகல் படமாளிகையில் நந்தனார் நாடகம் மேடையேறியது. சுந்தராம்பாள் இதில் நந்தனாராக நடித்திருந்தார்.

**1937 நவம்பர் 27**

◆ யாழ்ப்பாண நகரமண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாண நகரமண்டபம் சேர் .வைத்திலிங்கம் துரைசாமியால் திறந்து வைக்கப்பட்டது. பின்னாளில் நகரமண்டபம் றியோ பட மாளிகைக்கு வாடகைக்கு விடப்பட்டது. இங்கு ஆங்கிலப்படங்கள் திரையிடப்பட்டன. யாழ்ப்பாணத்தில் 70.மி.மீ திரையைக்கொண்ட படமாளிகையாக றியோ பட மாளிகை காணப்பட்டது.

◆ திரு.திருச்செல்வம்,பொன்னையா ஆகியோர் இணைந்து ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்குமிடையிலான போக்குவரத்திற்கு இயந்திரம் பொருத்தப்பட்ட பாதை ஒன்றை சேவையிலீடுபடுத்தினர். இதன் மூலம் ஐந்து நிமிடத்தில் காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கோ, ஊர்காவற்றுறையிலிருந்து காரைநகருக்கோ செல்லக்கூடிய வசதி ஏற்பட்டது. அதுவரை துடுப்பு வலிக்கப்படும் படகுகள் தான் சேவையிலீடுபட்டன. அதனால் முன்பு ஊர்காவற்றுறை-காரைநகர் பிரயாணத்துக்கு ஒரு மணித்தியாலயம் தேவைப்பட்டது.

**1938 மார்ச்**

◆ கதிர்காம நிர்வாகத்தில் இந்துக்களுக்கும் பங்கு வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டது. கொழும்பு விவேகானந்தசபையில் ஒன்றுகூடிய இந்துப்பிரமுகர்கள் கதிர்காம நிர்வாகத்தில் இந்துக்களுக்கும் பங்கு வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கூட்டத்தில் சட்டசபை உறுப்பினர்களான சு.நடேசபிள்ளை, அருணாசலம் மகாதேவா, மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வீரசிங்கம் உட்பட வடக்கு, கிழக்கு, மலையகம் என அனைத்துப் பிரதேசங்களிலுமிருந்து இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கதிர்காம ஆலயத்துக்குப் பொறுப்பான தம்மதெனிய பியரத்ன மகாநாயக்க தேரரும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

◆ தேசவழமைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யும் நோக்குடன் பொது மக்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்வதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் சட்டசபை உறுப்பினர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம்,சு.நடேசபிள்ளை, தம்பிமுத்து,கன்னங்கரா ஆகியோரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது.இந்தக் குழுவுக்கு ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமை வகித்தார். இவர்களுடன் சட்டவரைவைத் தயாரிக்கும் உதவிச்செயலாளர் வில்லவராயனும் வந்திருந்தார். (இவர் ஒல்லாந்தர் காலத்தில் தேசவழமைச் சட்ட மூலத்தைத் தயாரித்த வில்லவராய முதலியாரின் பரம்பரையில் வந்தவரோ தெரியாது). யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் இடம்பெற்ற அமர்வில் சட்டத்தரணி செல்லத்துரை தலைமையில் கலந்து கொண்ட இளம் சட்டத்தரணிகள் குழு . தேச வழமைச் சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டு இலங்கை முழுவதுக்கும் பொதுவான சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தது. எனினும் இவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. சீதனச்சட்டத்தில் மட்டும் சிறு திருத்தம் செய்யப்பட்டது.

◆ ஜெயரத்தினம் இந்தியாவின் மத்திய மாகாண ஜொபல்பூர் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.ஐரோப்பியரல்லாத ஒருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டது இதுவே முதல் முறை. இவரது சகோதரன் தம்பு சென்னை மாநகர ஆணையாளராகக் கடமையாற்றியிருந்தார்.

**1938 மார்ச் 23**

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டப திறப்பு விழா

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபம் சேர். வைத்தீலிங்கம் துரைசாமியால் திறந்து வைக்கப்பட்டது.

(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org